உ

கடவுள் துணை.

# செந்தமிழ்.

தொகுதி-௩௭.] விக்கிரம௵ ஆனிமீ [பகுதி-அ.

Vol. 37. June – July 1940. No. 8.

## பரதாழ்வான்வைபவம்.

[௨அ௨ஆம் பக்கத் தொடர்ச்சி.]

பரதாழ்வான், கைகேயியின் சோகமின்மைகண்டு அவளைப் புறக்கணித்து, தந்தையிறந்த துயர்தீரவேண்டி, எனக்குத் தந்தை தாய் முதலான எல்லா உறவுமுறையும் இராமபிரானாதலால், அவனையடைந்து வந்தனைசெய்தாலல்லது, என் 'சிந்தைவெங் கொடுந்துயர்' தீராதென்று சொல்லிக்கொண்டு, இராமபிரான் வீற்றிருக்குமிடத்தை நாடிச்செல்லலுற்றான்; அவனைக் கைகேயி குறுக்கிட்டுநின்று தகைந்து, 'அவன் (இராமன்) தம்பியும் தேவியுமான ஆண்துணை பெண்துணைகளோடு காடாளச்சென்றான்; (நீ முடிசூடி நாடாளவேண்டும்; அவனைத் தேடிச் செல்லாதே;') என்றாள்.

அதுகேட்ட பரதன், வேல்பாய்ந்த நெஞ்சில் தீ பாய்ந்தாற்போலக் கொடுந்துயரமடைந்து, இன்னும் என்னென்ன துன்பங்கள் கேட்கக்கடவனவோவென்று வருந்தி, இராமன் வனம்புகுதற்குக் காரணம் என்னென்று கேட்க, அதற்குக் கைகேயி தன்சாமர்த்தியத்தால் இவனுக்கு நன்மைகருதிச்செய்தனவாகச் சொல்லியனவெல்லாம், இவன் (பரதன்) கருத்தால் இவனுக்குத் தீமைவிளைத்தனவாகத் தோன்றுமாறு சொல்லக்கருதிய மஹாகவி,

*

வாக்கினுல் வரந்தரக் கொண்டு மைந்தனைப்
போக்கினேன் வனத்திடைப் போக்கிப் பாருனக்
காக்கினேன் அவனது பொறுக்க லாமையால்
நீக்கினுன் தன்னுயிர் நேமிவேந் தென்றுள்*

என்கிருர்.

இதனுள், கைகேயிகருத்தால் வாக்கினுல் வரந்தரக்கோண்டு என்றது, உனக்கு ராஜ்யம்கொடுக்க மனமில்லாத அரசன்பால், அவன் எனக்கு முன்னமே தந்திருந்த வரங்களைத் தரச்சொல்லி வாதாடி என் வாய்வல்லமையால் ராஜ்யத்தைக் கொண்டேன் என்பதாம்.

இது, விற்படைகொண்டு வென்று பெறவேண்டிய ராஜ்யத்தை என் சொற்படைகொண்டு வென்று பெற்றேன்: என்று தன் ஆற்றல் காட்டி, பரதனுக்குத் தசரதனிடத்தில் வெறுப்புண்டாக்கவும் தன்னிடத்தில் விருப்புண்டாக்கவும் கருதிக் கூறியவாறு.

மைந்தனைப் போக்கினேன் வனத்திடை என்றதன் கருத்து: அவ்வாறு ராஜ்யத்தைக் கொண்டதுமன்றி, தாடகையைக் கொன்றும், சிவதனுவை ஒடித்தும், மூவெழுமுறை முடியரசரைக் கொன்றுநின்ற பரசுராமனை வென்றும் நின்ற மைந்தனை, (வலியுடைய இராமனை) அவன் உன்னொடு பகைத்து உனக்கு இடையூறுசெய்யாமைப்பொருட்டு என் வாக்கினுல் காட்டுக்குப் போக்கினேன் என்பதாம். இது தன் பராக்கிரமம் காட்டியபடி.

போக்கிப் பார் உனக்காக்கினேன் என்றதன் கருத்து: உன்னைப் பரதேசத்துக்குப் போக்கி, அவனைச் சுதேசத்துக்கு அரசனுக்கக் கருதிய அரசன்கண்ணெதிரே அவனைக் காட்டுக்குப்போக்கி உன்னை அரசனுக்கிவிட்டேன்; அவனைப் போக்காமற்போனுல் உன்னை அரசனுக்கல் இயலாதென்பதாம். இதுவும் தன் பராக்கிரமம் காட்டியபடி.

---

* பள்ளியடைப்படலம். 65.

இதனால் அவனைக் காட்டுக்குப் போக்கியதும் நான் உனக்குச் செய்த நன்மையே யென்பதாம்.

அவன் அது பொறுக்கலாமையால் நீக்கினான் தன்னுயிர் நேமி வேந்து என்றதன் கருத்து: உனக்கு ராஜ்பம் கொடுக்கக்கூடாதென் றெண்ணிய தசரதன், உனக்கு நான் ராஜ்யம் கொடுத்ததைப் பொறுக்கமாட்டாமல் பொறாமையென்னும் கொடும்பாவம் புரிந் தமையால், அதற்குக் கழுவாயாகக் கொடியோரைக் கடியவல்ல சக்கரவர்த்தியான அவன், தன்னுயிரைத் தானே போக்கிக்கொண் டான்; அதற்கு நீ ஏன் வருந்துகிறாய்: என்பதாம். (அதுவும் நன்மையே என்பது குறிப்பு.)

இவ்வாறாகக் கைகேயிநினைவால் இவனுக்கு உலகியல்வழக் கால் நன்மையெனக்கருதிச் செய்த செயலெல்லாம் இவன் நினைவில் அறநெறிவழக்கால் தீமைபுரிந்தனவாகவே கருதற்குரியனவாயின. அக்கருத்து வருமாறு:—

வாக்கினால் வரந்தரக்கொண்டு என்றதற்கு, பெண்மக்களுக்கு இன்றியமையாத கற்புடைமையொன்றே அறநெறியொழுக்கமா யுள்ளது; அது, 'கற்பெனப்படுவது சொற்றிறம்பாமை' என்பத னால் கணவன் சொல்வழியொழுகுதலாயிருக்க, இவள், அதற்கு மாறாகத் தன்சொல்லின்வழியே கணவன் ஒழுகும்படி தன் வாய் வன்மையாலே வரங்கொண்டமையால் இவள் கற்பழிந்து சுயமக ளாயினாள்; அதனால் இவள் எனக்குத் தாயல்லள்: என்று கருதினான் என்பதும்,

மைந்தனைப் போக்கினேன் வனத்திடை என்றதற்கு மூவெழு முறைவந்து முடியரசர்குலங்களைக் களைந்து, நமக்குக் குலப்பகையா யுள்ள பரசுராமனை வலியடக்கிய பெருவலியுடையானே முடிசூடற் குரியனாயிருக்க, அவனை முடிசூடவிடாமல் வனத்துக்குப் போக்கிய தனால், இவள் ஜனத்துரோகியும் குலத்துரோகியும் நன்றிகொன்ற வளுமாகிறாள்: என்பதும்,

இன்னும்,

> "மைந்தனை மலராள் மணவாளனைத்
> துஞ்சும்போதும் விடாது தொடர்கண்டாய்"*

என்கிறபடியே மைந்து (வலி) உடைமையால் ஸர்வலோகநியாமகனையும் ஸமஸ்த ஐசுவரியங்களையும் உடைய ஸ்ரீமானையும் உள்ளவனுடைய நீங்காததொடர்பையறுத்து அவனை நியாம்யனாக்கி, வறியனாகும்படி வனத்திடைப்போக்கினமையால் பரராஜ்யாபஹாரமும் பரத்ரோகமும் செய்த மஹாபாபியாய், பகவத்விரோதியானாள்: என்பதும்,

போக்கிப் பார் உனக்காக்கினேன் என்றதற்கு, எனக்கு ஸ்வாமியாயுள்ளவனை வனத்திற்போக்கி ஸ்வாமித்ரோகமும், அவனுக்குத் தாஸனாயுள்ள என்னை அரசனாக்கி ஆத்மநாசமும் நான் அடையச் செய்தாள் என்பதும்,

அவன் அது பொறுக்கலாமையால் நீக்கினான் தன்னுயிர் நேமிவேந்து என்றதற்கு, வாக்கினால் வரந்தரக்கொண்டதும், அவனை வனத்துக்குப்போக்கிப் பார் எனக்காக்கியதும் பொறுத்தற்கரிய தீவினையாதலால், இத்தீவினைசெய்த தான் தன்னுயிர் துறவாது, தார்மிகனான அரசனை உயிர் துறக்கச்செய்தலால் இவள் இராஜத்ரோகியுமாயினாள் என்பதுமாம்.

இக்கருத்துக்கொண்டு கைகேயிமீது பரதாழ்வானுக்குண்டான கடுஞ்சினக்குறிப்புக்களைக் காட்டக் கருதிய மஹாகவி,

> சூடின மலர்க்கரம் சொல்லின் முன்செவி
> கூடின புருவங்கள் குதித்துக் கூத்துநின்
> றாடின வுயிர்ப்பினோ டழற்கொழுந்துகள்
> ஓடின வுமிழ்ந்தன வுதிரங் கண்களே.†

என்கிறார்.

---

* திருவாய்மொழி. 1. 10. 4. † பள்ளியடைப்படலம். 66.

இதனுள், சூடினமலர்க்கரம் சொல்லின்முன் செவிகூடின என்றது இராமன் சேவடிப்பூவினைச் சென்னியிற் புனைந்தவனாதலால் அப்பூப்போலும் இராமன் சேவடியடையும்படி இவன் சென்னியிற்சூடிய கரம், கைகேயிகூறிய கடுஞ்சொற்கள் இவன் செவியின்கட்சென்று புகுவதற்குமுன்னே இவன் செவித்தொளைகளை 'உடுக்கையிழந்தவன்கைபோலத்' தாமேசென்று அடைத்துக்கொண்டன: என்பதாம். அங்ஙனம் அவை சென்று அடையாவிடில் பரதன் என்படுவனோ என்றபடி.

இது, வந்தனை அவன்கழல்வைக்கும் பகவத்கைங்கர்யமான இஷ்டப்ராப்தியினும், பகவதபசாரமான அநிஷ்டத்தை நிவிர்த்திக்கையே சிறந்ததென்று காட்டுகிறது.

இதனால் பகவத்விரோதிகள்பேசும் பேச்சுக்களைச் செவிகொடுத்துக் கேட்கவொண்ணாதென்னும் மெய்ந்நெறியொழுக்கம் காட்டப்பட்டது.

புருவங்கள் குதித்துக் கூத்துநின்றாடின என்றது, இங்ஙனம் செய்த இவளை இனிக் கொல்லாதுவிடல் ஒல்லாது என்று சினக்குறிப்புக்காட்டும் புருவங்கள், வீரவெறிகொண்டு குதித்துக் கூத்தாடாநின்றன என்பதாம்.

உயிர்ப்பினோடு அழற்கொழுந்துகள் ஓடின என்றது, இவன் சினக்குறிப்பைக்காட்டவரும் பெருமூச்சோடுகூடிய வெப்பம், இவளைச் சுட்டுத்தின்னக்கருதி நட்புக்கொண்ட காற்றுடன்கூடியெழுந்தோடும் தீநாக்குப்போலச் சென்றன: என்பதாம்.

உமிழ்ந்தன உதிரம் கண்களே என்றது, இவன் அவளைப்பார்த்த பார்வையால் பாணம்போலப்பாய்ந்த கண்கள், அவள் நெஞ்சைப் பிளந்து ரக்தபானம்பண்ணியுமிழ்ந்தனபோலச் சிவந்தன: என்பதாம்.

இச்சினக்குறிப்பால் பரதாழ்வான் கைகேயியைக் கொன்றுவிடுவான் என்று தோன்றும்படியாயிற்று.

ஆகவே, அவளை அவன்கொல்லாமையால், மஹாகவி, சினக் குறிப்பைப் புனைந்துரைக்கும் புலமைத்திறமைகாட்டினர்போலும்: என்று கதைகேட்போர் கருதக்கூடும்: என்றெண்ணி, அவளை அவன்கொல்லாமைக்குக் காரணங்காட்டவேண்டி,

> கோடியவெங் கோபத்தாற் கொதித்த கோளரி
> கடியவள் தாயெனக் கருது கின்றிலன்
> நெடியவன் முனியுமென் றஞ்சி நின்றனன்
> இடியுரு மனையவெம் மொழி யியம்புவான்*

என்கிறார்.

இங்கு, பரதாழ்வானுக்கு உண்டான கோபத்தைக் கோடிய வெங்கோபம் என்கிறார். இதனால், அது, கோபம் என்றும், வெம் கோபம் என்றும், கோடிய வெம் கோபம் என்றும் முத்திறப்பட்டு ஒன்றினொன்று உயர்ந்திருக்கும் என்பதாயிற்று.

அவற்றுள், கோபமாவது: பொன் நிலம் மாதர் முதலிய புறப் பொருளாகிய உடைமைக்குக்கேடுவிளைத்தோரை ஒறுக்கக்கருதும் மனக்கொதிப்பு.

வெங்கோபமாவது: அவ்வுடைமைப்பொருளினும் சிறந்த தாளுகிய உடலுயிர்களுக்குக் கேடுவிளைத்தோரை ஒறுக்கக்கருதும் மனக்கொதிப்பு.

இவையிரண்டும் ஸ்வார்த்தமான உலகியல்பாதலால் உயர்ந் தோரால் இழிகுணமாகவே கருதப்படுகின்றன.

கோடியவெங்கோபமாவது: தாளுகிய உடலுயிர்ப்பொருளினும் சிறந்த தன்னுயிர்க்குயிராகிய தன் தலைவனுக்குக் கேடுவிளைத்தாரை ஒறுக்கக்கருதும் மனக்கொதிப்பு.

இது பாரார்த்தமாதலால் உயர்குணமாகக் கொள்ளப்படும். இது போர்வீரர்க்குரிய குணமாகப் போற்றத்தகுவதாம்.

---

* பள்ளியடைப்படலம். 70.

பரதாழ்வானுக்கு இராமபிரான் உயிர்க்குயிரான தலைவனாயிருத்தலால், அவனுக்குக் கேடுவிளைத்த கைகேயியை ஒறுக்கக் கருதும் மனக்கொதிப்புக் கொடியவெங்கோபமாய்க் கொள்ளத்தக்கதாயிற்று.

[விசுவாமித்திரமஹாமுனிவர், பகவத்ஸேவைசெய்யவேண்டி, தசரதனிடம்சென்று 'நின்புதல்வர் நால்வரினும் கரிய செம்மல் ஒருவனைத் தந்திடுதி'* என்று இரக்குமளவில், அவன் அதற்கு இசையாது, 'படையூற்றமிலன் சிறியன்'† என்றது, பகவதபசாரமாகக்கருதி, அவர்,'இரப்பான் வெகுளாமைவேண்டும்'‡ என்னும் நீதிநெறியைவிட்டு, தசரதனிடத்தில், வெங்கொடுஞ் சினங்கொண்டது இங்கு நினைக்கத்தகும்.]

இது, பரதாழ்வான் கைகேயியைக் கொலைசெய்யச்சமைந்த குறிப்பாயிற்று.

கோதித்தகோளரி என்றது இவன் (பரதன்) சினக்குறிப்புக் கண்டு மான்பிணைபோலும் மருண்டநோக்கினையுடைய கைகேயியை அவன் (பரதன்) மிருகேந்திரன்போல ஒறுத்தற்கேற்ற ஆற்றல் காட்டியவாறு.

கடியவள் என்றது இவன்கொண்ட இச்சினத்துக்கு இலக்கான மஹாபாபியாய்க் கடியத்தக்கவள் என்று அவள் பிழைபாடு காட்டியபடி.

கடியவள் தாயெனக் கருதுகின்றிலன் என்றது இத்தகைய பொறுத்தற்கரிய பலதீங்குகளையும் ஒருங்கிழைத்தமையால் அவளைத் தாயென்று கருதும் உறவையொழித்துப் பகையென்றே கருதினான் என்பதாம்.

---

* கையடைப்படலம். 10.

† ஷை. 12.

‡ திருக்குறள். 1060.

இன்னும், கடியவள் தாயெனக் கருதுகின்றிலன் என்பதற்கு, இக் குற்றங்களாற் கடிதற்குரியவளாயினும், அவள் இவனுக்குத் தாயாயிருத்தலால், தாய்க்கொலைசெய்யலாகாது என்னும் சாமாநிய தருமம் கருதி, அவளைக் கொலைசெய்யாதுவிட்டான் என்று எண்ணற்க: என்பதுமாம்.

இதனால், பகவத்விரோதிகளாயுள்ளார் தாய்முதலிய உறவுமுறையினரேனும் சாமாநியதருமங்கருதாது, அவர்கள் ஒறுக்கத்தக்கவர் என்னும் மெய்ந்நெறியொழுக்கம் காட்டியவாறு.

இவையெல்லாம் அவளை இவன் ஒறுத்தற்குரிய நிமித்தங்களாம்.

இவை உலகநூல்வழக்கொடு மாறுபட்டனவாயினும்,

"..................................நின்பாற்
பொறுப்பரி யனகள் பேசிற் போவதே நோயதாகிக்
குறிப்பெனக் கடையுமாகில் கூடுமேல் தலையையாங்கே
அறுப்பதே தருமம் கண்டாய்......................"*

என்னும் அறிவனூற்பொருளாய் இவனொழுகும் மெய்ந்நெறியொழுக்கிற்கு இழுக்கில்லாத அறமாம் என்று அறியத்தகும்.

இங்ஙனம் இவன் அவளையொறுத்தற்குரிய நிமித்தங்கள் பலவும் இருந்தும், இவன் அவளை ஒறுக்தாற்றுதவிடுத்தற்கு நிமித்தம் காட்டவேண்டி, நெடியவன்முனியுமென் றஞ்சிநின்றனன் என்கிறார்.

இதன்கருத்து: ஸர்வலோகநாயகனாயுள்ள இராமபிரான், எனக்கு அடியனான இவன் பெண்கொலைசெய்தானே என்று திருவுள்ளங்கன்றும்; அன்றியும், தாய்க்கொலைசெய்தானே என்று திருவுள்ளங்கன்றும்; அன்றியும், என் தாயைக்கொன்றானே என்று திருவுள்ளங்கன்றும்: என்பனவும், அன்றியும், எனக்குப் பாதந்திரனான இவன் ஸ்வதந்த்ரனாய் இதுசெய்தானேயென்று திருவுள்ளங்கன்றும்: என்பதும் ஆம்.

* திவ். திருமாலை. 8.

இக்கருத்துக்களெல்லாம் கைகேயியை இவன்கொல்லாமைக்கு உண்மையான நிமித்தங்கள் என்பதுணர்த்தவேண்டியே பரதாழ்வான்வாயாலும், 'நாயகன் முனியுமென்றஞ்சினேன்' என்று பின்னுங்கூறி வலியுறுத்துவார். அதனால் அது கூறியது கூறலாகாதாயிற்று.

இதனால், இவன், அவன் திருவுள்ளக்குறிப்பில்லாததொன்றையும் தானே ஸ்வதந்த்ரனாய்நின்றுசெய்யுந்தன்மையில்லாத பகவத்பாரதந்த்ரியமுடையான்: என்பதாம்.

[இவன் அநுஷ்டிக்கும் பகவத்பாரதந்த்ரியதர்மம் ஜ்ஞாநபரிபாகமான தெளிவுபற்றிநிற்கும். அதனால் இவனுக்குப் பகவத்துவேஷிகளிடத்திலுண்டாகும் சினம், பகவத்பாரதந்த்ரியரூபமான தன் ஸ்வரூபஜ்ஞாநத்தால் ப்ரவிர்த்தியின்றித் தானே தணியும்.

இளையபெருமாளுக்குப் பகவத்துவேஷிகளிடத்திலுண்டாகும் சினம், பகவத்பக்திபரிபாகமான கலக்கத்தாலே ஸ்வஸ்வாதந்த்ரியபுத்தி தலையெடுக்கத் தோன்றுவதாகையால் அது, தானே தணியமாட்டாது; தெளிவுடைய பிறரால் தெளிவித்தபின்பு தணிவதாயிருக்கும். இவை தம்முள் வேறுபாடாகும்.

இதனை, வையமையல் தோன்று நெறிவாழ் துணைத்தம்பி* என்று பரதாழ்வானையும், 'சினத்திலை யென்வயின் நேயநெஞ்சினால்'† என்று இளையபெருமாளையும் இராமபிரான்கூறியவாற்றால் அறியலாம்.]

இனி, இடியுரு மனைய வெம்மொழி யியம்புவான் என்றதன் கருத்து, நெடியவன்முனியுமென்று அஞ்சி, இவன் அவளை ஒறுக்காதுநின்றானாயினும், இவனியம்பும்மொழிகள் 'நாகமெனுங் கொடியா'‡ளாகிய அவள் தானே சாமாறு அவள் செவித்தொளையுள்

---

* நகர்நீங்குபடலம். 138.

† இளைகண்டுநீங்குபடலம். 44.

‡ கைகேயிசூழ்வினைப்படலம். 11.

இடிவிழுந்தாற்போல விழுந்து அவளைக் கொல்லவல்லனவாம்: என்றவாறு. அதனாலும் அவள் சாவாதிருப்பது ஊழ்வலியா னாயிற்று என்பது குறிப்பு.

இனி அத்தகைய மொழிகள் பலவற்றுள் ஒருசிலவற்றை இங்கு எடுத்துக்காட்டுவாம். அவை,

நீயினை மிருந்தனை யானும் நின்றனேன்
ஏயெனும் மாத்திரத் தெற்று கிற்றிலேன்
நாயகன் முனியுமென் றஞ்சி னேனலால்
தாயெனும் பெயரெனைத் தடுக்கற் பாலதோ*

என்றற் றொடக்கத்தன,

இவற்றுள் நீயினமிருந்தனை என்றதன்கருத்து, செய்யத்தகாத கொடிய பாபத்தை ஒருவர் அறியாமையாற்செய்துவிட்டாலும், அப்பாபம் தீரப் பிராயச்சித்தமாக அநுதாபத்துடன் தம்முயிரை மாய்த்துக்கொள்வார்கள். அப்படியும் மாய்த்துக்கொள்ளாமல் நீ இன்னம் உயிரோடிருந்துகொண்டிருக்கிறாய்: என்பதாம்.

அன்றியும், ஸர்வலோகநாயகனான எம்பிரானுடைய முடிசூட்டு விழாவாகிய பரமதர்மத்தை அழித்து, அவனைக் காட்டிற்செல்லப் பணித்த மஹாபாபத்தின் பலமாக நீ உடனே மடிந்திருக்கவேண்டும். அங்ஙனம் மடியாது இன்னமிருக்கின்றாய்: என்பதுமாம்.

அன்றியும், அரிவையர் தம் கணவன் உயிர்துறத்தல் கண்டால் தாமும் உடனே உயிர்துறப்பர்; நீ அவனுயிரைத் துறப்பித்தும் இன்னும் இருக்கின்றாய்: என்பதுமாம்.

இன்னும், உலகாளும் அரசன் உயிர்நீக்குமாறு கொடுவினை புரிந்த நீ கொற்றவற்குற்றோராலும் கொல்லப்படாமல் இன்னும் இருக்கின்றாய்: என்பதுமாம்.

---

* பள்ளியடைப்படலம். 72.

இனி, யானும் நின்றனேன் என்றதன் கருத்து, எனக்கு உரிமையுள்ள ராமகைங்கர்யமான ராமராஜ்யாபிஷேகத்தைத் தவிர்த்த மஹாபாதகமொன்றுகொண்டே, உன்புத்தியால் முறைசெயற்குரிய அரசனுயுள்ள நானே உன்னைக் கொன்றிருக்கவேண்டும்; அங்ஙனமும் கொல்லாது வாளாவிருக்கின்றேன்: என்பதாம்.

அன்றியும், என்னுடைய ஸ்வரூபதர்மமாகிய இராமனடிமுடி சூடும் தாசவிருத்தியை அழித்து, அரசர்முடி அடிசூடும் ராஜவ்ருத்தியைச் சுமத்தி எனக்கே ஆத்மநாசம்புரியநினைந்த பிழை கண்டும் யான் உன்னை ஒறுக்காதிருக்கின்றேன்: என்பதுமாம்.

இதனால் இவனுக்கு ராஜவிருத்தியினும் சிறந்தது பகவத் தாசவிருத்தி என்பதாயிற்று.

உன்னை நான் ஒறுத்தற்கு ராஜ்பாதிபத்தியம் வரவேண்டுமென்று காத்திருக்கிறேனென்று எண்ணவேண்டா. உடனே கொல்லவல்லேன் என்பான் ஏயேனும் மாத்திரத் தேற்றுகிற்றிலேன் என்கிறான்.

இதன்கருத்து, உன்னை ஒறுத்தற்குரிய கொலையாளியொருவனை ஏ! என்று அழைக்குந்துணையும் பொறப்பேனே, அங்ஙனம் அழைப்பொலியான ஏ என்னும் இரண்டுமாத்திரைப்பொழுதைக்குள் நானே உன்னை ஒரே எற்றாக எற்றிக் கொன்றிருக்கவேண்டும். அங்ஙனம் கொல்லுதற்குரிய ஸ்வாதந்த்ரியம் என்னும் ஆற்றலில்லாதவனுயுள்ளேன்; நான் பகவத்பாதந்த்ரனுயிருப்பதால் அவன் குறிப்பின்றி பகவத்விரோதியாகிய உன்னை ஒறுத்தற்குரியனல்லேன்: என்பதாம்.

இது, 'குறிப்பினுக் கடையுமாகில் கூடுமேல் தலையை ஆங்கே அறுப்பதே தருமம்'* என்னும் அறிவனூற்பொருள்கொண்டு இம் மெய்ந்நெறியொழுக்கம் காட்டியவாறாயிற்று. [அவன் திருவுள்ளக் குறிப்பறிந்த இளையபெருமாள் சூர்ப்பனகையை மூக்கரிந்தமையும் இங்கு நோக்கத்தகும்.]

---

* திவ். திருமாலை. 8.

இனி, நாயகன்முனியுமென்றஞ்சினேனலால் என்றதன்கருத்து இராமபிரான் என்பணிபுரியுமிவன் என்குறிப்பறியாது, 'இதுசெய்தானே' என்று திருவுள்ளங்கன்றுமென்று அஞ்சி, உன்னைக்கொல்லாதுநின்றேனல்லது உன்னைக் கொன்றதனால் எமபடர்முனிவுண்டாகுமென்று அஞ்சிநின்றேனல்லேன்: என்பதாம்.

இதனால், எம்பெருமானடியார்க்கு எமபாதையில்லை என்பது குறிப்பாயிற்று.

இனி, தாயென்னும் உனக்கு ஒருதீங்கும் செய்யலாகாது என்று அஞ்சிநின்றேனல்லேன்: என்பான், தாயெனும் பெயரேனைத் தடுக்கற்பாலதோ என்கிறான்.

இதன்கருத்து, உலகத்தில் தாய்மார் தம்மக்களுக்கு நன்மை புரியும் இயல்புடையராயிருப்பர்; அங்ஙனமின்றி நீ எனக்கு ஸ்வரூபநாசமுண்டாம்படி தீமைவிளைத்தமையால் உண்மையான தாயாகாது, பொருளற்ற தாய் என்னும் பெயர்மாத்திரமே படைத்தாய்; ஆகலால் உன்னைக்கொன்றால் அது தாயைக்கொன்ற பழியாகாது, சத்துருவைக்கொன்ற புகழாகும்: என்பதாம்.

அன்றியும், உடல்தொடக்கற்ற என்னைக் குடல்தொடக்கற்ற தாய் என்னும் பெயர் தடுக்கவல்லதோ என்றான்: என்பதுமாம்.

அன்றியும், தாய் என்னும் பொருளில்லாத பெயர்மாத்திரம் படைத்த கருணைக்கிழங்குமுதலியவற்றின் தாய்க்கிழங்கை வெட்டி நறுக்கிக் கறிசமைத்துண்பார்க்குத் தாய்க்கொலையும் ஊனுண்டலும் ஆகிய பாபங்களுண்டாமாகில், உன்னைக் கொல்லத் துணியும் எனக்கும் பாபம்வருமென்று அஞ்சுவேன்; அங்ஙனமில்லாமையால் உன்னைக் கொல்லுவதால் மாத்ருஹத்தி என்னும் பாபம்வருமென்று அஞ்சினேனில்லை: என்பதாம்.

திரு. நாராயணையங்கார்,
பத்திராசிரியர்.

ஸ்ரீ:

தா(யா)ராநகரவேந்தன் போஜதேவன் இயற்றிய

# ஸரஸ்வதீகண்டாபரணம்.

## (கலைமகள்கழுத்தணி)

[உஅஅ-ஆம் பக்கத் தொடர்ச்சி.]

### 22. ரீதி.

ரீதி: ஸா யதுத்பத்த்யாதிக்ரியாக்ரம: ॥ அஎ ॥

ஒருபொருளின் தோற்றம் முதலிய தொழில்களை முறையே கூறின் அங்கு 'ரீதி' என்னும் குணம் தோன்றும்.

**உதாரணம்:—**

ப்ரயச்சோணஸ்தாபஸ்தாவத்தத: கநகப்ரப:
ஸ்தந்யாவிரஹார்த்தஸ்த்ரீகபோலதலத்யுதி: ।
ப்ரபவதி த்வாந்தத்வம்ஸக்ஷம: க்ஷணதாமுகே
ஸரஸபிஸிநீகந்தச்சேதச்சவிர்ம்ருகலாஞ்சந: ॥

சந்திரன், இரவின் தொடக்கத்தில், தோன்றும்போது செந்நிறமுள்ளவனும், பின்பு பொன்னிறமுள்ளவனும், பின்பு விரஹநோயுற்றபெண்களின் கன்னம்போன்ற நிறமுள்ளவனும், பின்பு இருளைத்தொலைக்கவல்லவனுந் தாமரைத்தண்டை முறித்தாற்போன்ற (வெண்மையான) காந்தியுள்ளவனும் இருந்துவருகிறான்.

இங்கே, சந்திரனது உதயம் முதலாகப் பலவகைநிலையும் முறையே கூறப்பட்டிருத்தலின் 'ரீதி' என்னும் குணமுளதாம்.

### 23. உக்தி.

உக்திர்நாம யதி ஸ்வாபிப்ராய ஸம்ஸ்ருத்ய ஸவ்யாஜமபிதீயதே ।

தான் கூறக்கருதியபொருளைக் கருதியாங்கே வெளிப்படக் கூறாது அப்பொருள் தோன்றுமாறு வேறொருநெறியாற்கூறுதல் 'உக்தி' என்று கூறப்படும்.

உதாரணம்:—

த்வமேவம் ஸௌந்தர்யாபரா ஸ ச ருசிரதாயாம் பரிசித:
கலாநாம் ஸீமாநம் பரமிஹ யுவாமேவ பஜத: ।
அயி த்வந்த்வம் திஷ்ட்யா ததிதி ஸுபகே ஸம்வததி வா
மத: ஶேஷம் சேத் ஸ்யாஜ்ஜிதமிஹ ததாநீம் குணிதயா ॥

கல்யாணி! நீயோ இவ்வாறு பேரழகுவாய்ந்தவள், அவனும் அழகுள்ளவன்; நீங்களிருவருமே கலைகளின் எல்லையையடைந்தவர்களாயுள்ளீர்; உங்களிருவருக்கும் சேர்க்கை மிகவும் ஒத்துள்ளது; எஞ்சியுள்ளதும் (கல்யாணமும்) நிகழுமாயின் குணமுடைமை வாழ்வடைந்ததாகும்.

இங்கே, ஒருத்தி தலைவியைத் தலைவனோடுகூடுமாறு கூறக் கருதியவள், அதைக் கருதியாங்கே வெளிப்படையிற்கூறுது இவ்வாறு வேறுநெறியால் மறைத்துக்கூறுதலால் இது 'உக்தி' என்னும் குணமுள்ளதாம்.

## 24. பிரௌடி.

விவக்ஷிதார்த்தநிர்வாஹ: காவ்யே ப்ரௌடிரிதி ஸ்ம்ருதா ॥ ॥

கூறக்கருதிய விரிந்தபொருளைச் சிலசொற்றொடர்களாலே) நிர்வஹிப்பது (-கூறிமுடிப்பது) 'பிரௌடி' என்று கூறப்படும்.

உதாரணம்:—

த்வத்வக்த்ரேந்துவிலோகநாகுலதியா தாத்ரா த்வதீயாம் ஶ்ரியம்
நிக்ஷிப்ய த்ருதமாஜகேஷு விதுஷாம் வக்ஷஸ்ஸு கோஶார்பித: ।
தத்தேநைவ நியதம் ஸமீக்ஷ்ய ஹ்ருதயே ஷேஷாமியம் த்ருஶ்யதே
தேநாத்ரோத்யபஸே கவித்வவஸிநாம் காமேவ ஸா யாசதி ॥

உன்னைப் படைத்த நான்முகனால் உன் மதிபோன்ற முகத்தைக்கண்டு கலக்கமடைந்து உனக்குரிய இலக்குமி (-செல்வம்) உன் சத்துருக்களிடத்தில் வைக்கப்பட்டுப் புலவர்களுக்குரிய இலக்குமி (-செல்வம்) உன்னிடத்தில் வைக்கப்பட்டாள். ஆத

லால் இப்புலவர்கள் தவறாமல் வறுமையடைகிறார்கள். ஆனால் நீ இப்புலவர்களுக்குரிய இலக்குமியை ஆதரிக்கிறாயில்லை; ஆகையால் அவர்கள் வீட்டில் அவள் காணப்படுகிறாள். உனக்குரிய சத்துருக்களிடமுள்ள இலக்குமியை நீ விரும்புகிறாய்; அதனால் அவள் உன்னைநோக்கி விரைந்துவருகிறாள்.

இங்கே, ஒரு அரசனைப்பார்த்து, "நீ உன் செல்வம் முழுவதையும் சிறிதும் பற்றுள்ளம்வையாது புலவர்களுக்கே கொடுத்துவிடுகிறாய்; பகைவர்பொருள்முழுவதையும் கைப்பற்ற எண்ணுகிறாய்; எண்ணியாங்கே அவையும் எளிதில் நின்னால் கைப்பற்றப்பட்டு நின்மாட்டு வந்துவிடுகின்றன. இதன் காரணமும் எனக்குத் தெரியலாயிற்று. அஃதென்னையெனில்,—உன்னைப் படைக்கும்போது பிரமதேவன் உன் முகத்தழகைப்பார்த்து மனமயங்கி உனக்குச்செய்தமைக்கத்தக்கசெல்வத்தை உன்பகைவர்களிடத்தே வைத்து புலவர்களுக்குச் செய்தமைக்கவேண்டிய செல்வத்தைத் தவறாக உன்னிடத் தமைத்துவிட்டான். ஆதலால்தான் புலவர்கள் யாவரும் இயல்பாகவே வறுமையுற்றுள்ளனர். நீ இவற்றையெல்லாம் உணர்ந்து புலவராகிய பிறர்க்குரியசெல்வம் புலவருக்கேயாகுக வெனக்கருதி உன்னிடத்துள்ள செல்வமுழுவதையும் புலவருக்கே அளிப்பவனாய், உனக்குரிய செல்வமாகிய பகைவரிடத்துள்ள செல்வத்தையெல்லாம் பெற எண்ணியபோதே அச்செல்வம் உன்னிடத்தெய்துகின்றது." என்னும் மிக விரிந்த இப்பொருளைச் சுருங்கிய சிலதொடர்களாற் கூறியிருத்தலால் இது 'பிரௌடி' என்னும் குணமுள்ளதாம்.

## விசேடகுணங்கள்.

(குற்றமாயிருப்பினும் குணமாகுமவை)

𑌪𑌦𑌾𑌦𑍍𑌯𑌾𑌶𑍍𑌰𑌿𑌤 𑌦𑍋𑌷𑌾𑌣𑌾𑌂 𑌯𑍇 𑌽𑌨𑍁𑌕𑌰𑌣𑌾𑌦𑌿𑌷𑍁 ।
𑌗𑍁𑌣𑌤𑍍𑌵𑌾𑌪𑌤𑍍𑌤𑌯𑍇 𑌨𑌿𑌤𑍍𑌯𑌂 𑌤𑍇 𑌦𑍋𑌷𑌗𑍁𑌣𑌾𑌃 𑌸𑍍𑌮𑍃𑌤𑌾𑌃 ॥

பதம்முதலியவற்றைச்சார்ந்த குற்றங்களுள் எவை அநுகரணம் முதலிய இடங்களில் குணமாகுந்தன்மையை அடைவனவோ அவை, ஈண்டு, தோஷகுணங்கள் என்று கருதப்பட்டவையாம்.

[illegible] ।
[illegible] ॥ ௯௦ ॥

* மூன்றுவகைப்படுவனவாய அவற்றைப் புலவர் இருபத்து நான்காக விரித்துக்கூறியபடியே அவை குணமாமாறும் ஈண்டு விரித்துக்கூறப்படும்.

### 1. அஸாது.

[illegible] ।
[illegible] ॥ ௯௧ ॥

'ம்லிஷ்டம்' 'ம்லேச்சிதம்' முதலியவை சொற்குற்றங்களே யாயினும், அநுகரணம் (பிறிதோரிடத்துக் கூறியதைக்கூறுதல்) ஆகியக்கால் குணமாந்தன்மையை அடைகின்றன.

[சொல்லின் ஒருபகுதி சொல்லப்படாமற் குறைந்திருத்தல் ம்லிஷ்டமாம். தெளிவின்றியுரைத்தல் மிலேச்சிதமாம்.]

உதாரணம்:---

[illegible] ।
[illegible] ॥

கூந்தலைப்பிடித்து முகத்தைநிமிர்த்து நாயகர் வலிந்து முத்த மிடும்போது, "ஹா-ம் ஹா-" "மமம" "விடு" என்று தலைவியர் மெதுவாகக்கூறுதல் விளங்குகின்றது.

இங்கே, "ஹா-ம் ஹா-ம்" என்று கூறற்பாலது "ஹா-ம் ஹா-" என்று இறுதிகுறையுமாறு கூறப்பெற்றமையால் ம்லிஷ்டமாம்; ஆயினும் தலைவிகூறியாங்கே கூறும் அநுகரணமாதலால் ஈண்டு அது குற்றமாகாது.

---

* மூன்றுவகை - சொற்குற்றம், பொருட்குற்றம், சொற்பொருட் குற்றம் என்பன.

## 2. அப்ரயுக்தம்.

𑌪𑍍𑌰𑌾𑌜𑍍𑌞𑌕𑌵𑌿𑌭𑌿𑌰𑌪𑍍𑌰𑌯𑍁𑌕𑍍𑌤𑌸𑍍𑌯 𑌤𑌥𑌾𑌨𑍁𑌕𑌰𑌣𑍇 𑌸𑍍𑌥𑌿𑌤𑌿𑌃 ।

கவிகளால் அடிப்படவழங்கப்பெருதசொல்லாயிருப்பினும், அது அநுகரணத்தின்கண் வழங்கப்படுமாயின் குற்றமாகாது குணமாம்.

உதாரணம்:—

𑌦𑌿𑌵𑌂 𑌪𑌤𑍍𑌕𑌷𑌿𑌣𑍋 𑌯𑌾𑌨𑍍𑌤𑌿 𑌯𑍇𑌽𑌵𑍀𑌕𑍍𑌷𑌤 𑌸𑌾𑌕𑍍𑌷𑌿𑌣𑌃 ।
𑌪𑌤𑍍𑌕𑌷𑌿𑌣𑍋𑌽𑌪𑌿 𑌨𑍋 𑌯𑌾𑌨𑍍𑌤𑌿 𑌯𑍇 𑌵𑌵𑌕𑍍𑌷𑌿 𑌪𑍍𑌰𑌯𑍁𑌞𑍍𑌜𑌤𑍇 ॥

கால்களை வருத்துபவர்கள் (-கால்களால் நடப்பவர்கள்) சுவர்க்கம் அடைவார்கள். எவர்கள் 'வவக்ஷி' என்ற (குற்றமுள்ள) சொல்லைப் பிரயோகிக்கிறார்களோ அவர்கள் காலால் நடப்பவர்களாயினும் அங்கே போகார்கள்.

இங்கே 'அவீக்ஷத' 'வவக்ஷி' என்னும் சொற்கள் கவிகளால் வழங்கப்படாதனவாயினும், அநுகரணத்தின்கண் வந்துள்ளமையால் குணமாயின.

## 3. கஷ்டம்.

𑌯𑌦𑍍𑌵𑍈𑌤𑌿 𑌶𑍍𑌰𑌵𑌂 𑌕𑌷𑍍𑌟𑌂 𑌤𑌸𑍍𑌯 𑌦𑍁𑌰𑍍𑌵𑌚𑌕𑌾𑌦𑌿𑌷𑍁 ।
𑌗𑍁𑌣𑌤𑍍𑌵𑌮𑌨𑍁𑌦𑍍𑌰𑌿𑌕𑍍𑌤𑍇 𑌸𑌾𑌨𑍁𑌪𑍍𑌰𑌾𑌸𑌸𑍍𑌯 𑌸𑌂𑌶𑍍𑌰𑌯𑌃 ॥ ௧௨ ॥

செவிகளுக்குத் துன்பம் விளைக்கக்கூடியவையாயிருப்பினும், துர்வசகம் முதலியவற்றில் அநுப்பிராஸத்தோடுகூடியவாய்வரின் அவை குற்றமாகாது குணமாம்.

உதாரணம்:—

𑌤𑍍𑌵𑌾𑌷𑍍𑌟𑍍𑌰𑌾𑌸𑍍𑌤𑍍𑌵𑌾𑌷𑍍𑌟𑍍𑌰𑌾𑌰𑌿 𑌰𑌾𑌷𑍍𑌟𑍍𑌰
𑌰𑌾𑌷𑍍𑌟𑍍𑌰𑌨𑌾𑌶𑌂𑌷𑍍𑌟𑌿𑌨𑍋 𑌜𑌨𑌾𑌃 ।
𑌯𑌾𑌤𑍍𑌰𑌾𑌷𑍍𑌟𑍍𑌰𑌾𑌃 𑌸𑍌𑌰𑌾𑌷𑍍𑌟𑍍𑌰
𑌗𑍂𑌰𑌾𑌰𑌾𑌷𑍍𑌟𑍍𑌰𑌂 𑌚 𑌨𑌾𑌷𑍍𑌟𑌿𑌣𑌃 ॥

அசுரர்களுக்குப்பகைவரான தேவர்களின்ராஜ்யத்தில் அசுரர்கள் இல்லை; வறுக்கும்சட்டியில் கடைப்பல்லற்ற மனிதர் இல்லை; சுராட்டிரதேசத்தில் திருதராட்டிரன்புதல்வர்கள் இல்லை; மஹாராட்டிரதேசத்தில் ஒட்டகைக்காரர்களில்லை.

இங்கே கூறிய சொற்கள் செவிகளுக்குத் துன்பந்தருவனவாயிருப்பினும், 'வ்யாவஹாரிக சதுஷ்ஷஷ்டி'யில் அங்கீகரிக்கப்பட்ட சொல்லாயிருத்தலாலும், இவை அநுப்பிராஸத்திற்கு உதவுவனவாதலாலும் குணமாயின.

['ஶ' 'ஷ' 'ர' 'ட வருக்கம்' இவை சிருங்கார (-காம)ச்சுவைக்குப் பொருந்தாதன; அவை சுவையற்றவையாம். அவை பீபத்ஸம் (இளிவரல்) என்னும் சுவையில் வரும்போது அச்சுவையை எடுத்து உயர்த்துவனவாய் நல்லனவாம்.]

### 4. அநர்த்தகம்.

யத்ரூபாதிபூரணாத்யர்த்தம் ப்ரயுக்தம் யமகாதிஷு ।
ஶப்தமநர்த்தகம் தஸ்யாபி யதோஷ: ॥ ௬௫ ॥

சுலோகத்தின் அடியை நிரப்புதல் முதலியன பயனாகவருபவை யமகம் முதலியவற்றுக்கும் உதவுவனவாய்வரின் அவற்றுக்குத் தனித்துப் பதப்பொருளின்றி அவை அநர்த்தகமாயிருப்பினும், குற்றமாகாது குணமாம்.

உதாரணம்:—

"யோஷிதாமதிதராம் நகாங்கிதம்
காத்ரமுஜ்ஜ்வலதயா நகாங்கிதம் ॥"
"வக்த்ரம் பாதி நிதாந்த காந்தம்
ஸ்த்ரீயாயிகானாம் பாதி காந்தம் ॥"

"(நாயகனுடைய) நகங்களால் ஊறுபட்ட மடந்தையரது மேனி அழகாயிருத்தலின் அது குறையாகாது."

"ஒருத்தி இணையற்றமுகத்தால் நன்குவிளங்கினாள். அழகுமிக்கவருக்கு மேனகையும் எம்மாத்திரம்?"

இங்கே 'வஷ' 'வ' என்னும் சொற்கள் தமக்கெனப் பொருளின்றியிருப்பினும் அவை யமகத்திற்குப் பயன்படுதலுடைமையால், செய்யுளடியைமட்டும் நிரப்புதற்கு வந்தனவென்றும் 'அநர்த்தகம்' என்னும் குற்றத்தின்பாற்படுவன என்றும் கூறப்படா. மற்று அவை ஈண்டுக் குணமாகக் கொள்ளப்படும்.

## 5. அந்யார்த்தம்.

யத்து ப்ரஸித்தஸ்ய த்யக்தேந ப்ரயோகோऽந்யார்த்தஸம்ஜ்ஞித: ।
ப்ரஹேலிகாதிஷு ப்ராயோ குணத்வம் தஸ்ய யுஜ்யதே ॥

சொற்களுக்குத் தொன்றுதொட்டு வழங்கிவரும் பொருளை விட்டு வேறுபொருளைக் கற்பித்துக்கொண்டு வழங்குதல் 'அந்யார்த்தம்' என்னும் குற்றமாமென்று முன் உரைக்கப்பட்டது; அங்ஙனம் 'பிரஹேளிகை' முதலியவற்றின்கண் வழங்கப்படின் அது குணமாம்.

உதாரணம்:—

வாதய: கதி காலே தே ஸாதய: ஸாஹஸோத்பவா: ।
ஸந்த்ரு ஸாக்ஷாத்ப்ரவந்த்யந்த வாயவோऽத்ர யாமிந: ॥

ஓ பெண்ணே! உன் அழகிய பாதங்களில் அணியப்பெற்றிருக்கும் சிறு சதங்கைகளின் ஒலியை நான் செவியாற் கேட்டேன்; ஆதலால் காதல்மேலிட்டு என் உயிர் தரிக்கவில்லை.

இங்கே 'வாதய:' முதலிய சொற்களுக்கு வழக்காற்றில் இல்லாத பொருளைக் கற்பித்துக்கூறியிருப்பினும், பொருளைமறைத்துக்கூறப்படும் 'பிரஹேளிகை' முதலிய இடங்களில் அங்ஙனம் கூறுதல் குற்றமாகமாட்டாமையால் குணமாயிற்று.

## 6. அபுஷ்டார்த்தம்.

தாத்பர்யாவேஷ்டாயஸ்ருதிர் யத்ர ஸ்வகாஸிதா ।
தஸ்யாத்ருஷ்டோ நைராகாங்க்ஷ்யாத் குணத்வமுபயுஜ்யதே ॥

சிறியபொருளைக்குறித்தற்குப் பலசொற்களைக் கூறுதல் 'அபுஷ்டார்த்தம்' என்னும் குற்றமாமென்று முன்பு கூறப்பட்டது;

சுலோகம் அமைவதற்காக அவ்வாறு கூறப்படுமாயின் அது குணமேயாம்.

உதாரணம்:—

த்விரஷ்டவர்ஷாக்ருதிரேஷ பாலோ
பாலஸ்ய கல்பத்ருமவத்பிராஹு: |
யஶ்சேந்த்ரஶப்தார்த்தநிஷூதநம் ஹரே:
ஹிரண்யபூர்வம் கஶிபும் ப்ரசக்ஷதே ||

இரட்டித்த எட்டுவயதுள்ளவனான இவனை, இப்போருக்குக் 'கல்ப' என்னும் சொல்லை முன்னேபெற்ற விருக்ஷம்போன்றவனென்று கூறுவர். இந்திரனுடைய இந்திரன் என்ற பெயரின் பொருளைத் தொலைத்த எவனை 'ஹிரண்ய' என்ற சொல்லை முன்னே பெற்ற 'கசிபு' என்பார்களோ (அவனைப் பகவான் கொன்றார்.)

இங்கே, பதினாறு வயதென்பதை இரட்டித்த எட்டுவயதென்றும், கல்பவிருக்ஷம் என்பதைக் 'கல்ப' என்ற சொல்லை முதலில் பெற்ற விருக்ஷம் என்றும், இந்திரனை வென்றோன் எனற்பாலதனை இந்திரனுடைய இந்திரனெனும் பெயர்ப்பொருளை ஒழித்தோனென்றும், ஹிரண்யகசிபு எனற்பாலதனை 'ஹிரண்ய' என்னும் சொல்லை முன்னே பெற்ற 'கசிபு' என்றும் கூறியதாற் பெரும் பொருட்சிறப்பொன்றுமில்லாமையால் இது 'அபுஷ்டார்த்தம்' என்னும் குற்றமாகற்பாலதேயாயினும், சுலோகம் அமைவதன் பொருட்டே இவ்வாறு கூறப்பட்டமையால் குற்றமாகாது குணமாயிற்று.

## 7. அஸமர்த்தம்.

ப்ருதிவ்யாதிதராதௌ ச யதஸமர்த்தவாசகம் |
தஸ்யாபி வசநே ப்ரோக்தம் ஸாமர்த்யம் ஸம்ஸ்க்ருதாதிஷு ||௬௬||

முன்பு, ஒருபொருளுக்கு மரபுமுறையே வாசகமாகாதசொல்லை அப்பொருட்குக்கூறின் அது 'அஸமர்த்தம்' என்னும் குற்றமாமென்று கூறப்பட்டது. அது காமநூல்வழக்குப்பற்றிய சில இடங்களில்வரின் பொருந்துமாதலால் ஆண்டுக் குற்றமாகாது குணமாம்.

உதாரணம்:—

ரூஶனாஞ்ஞம்வினிதவதீஷு கராசேரு
நீவிமோக்ஷேசகாங்க்ஷீஷு தத்ப்ரஷுர் ।
ரக்ஷஶேவேணிகாகரஹதத ஞீ
ரணருகணிதவாரானவாசகாவிஜெ ॥

ஒருதலைவி தன்காதலனுடைய நுனிக்கையால் பற்றப்பட்ட தன் ஆடைமுடிப்பை விரைவில் திமிறிக்கொண்டு, அரைகுறையாக மூடியபார்வையுடன் காதல்கொண்டவீணைக்காரன்கையால் மீட்கப் பட்டொலிக்கும் வீணையின் ஓசைபோல் அழகாகக் கூவினாள்.

இங்கே, 'கூஜிதம்' என்று பறவைகளின் ஓசையைக்குறிக்கும் சொல்லைத் தலைவியின்வாயினின்றுவரும் ஒலிக்குக்கூறியிருப்பது 'அஸமர்த்தம்' என்னும் குற்றமாயினும், காமநூலார் தலைவரோடு கூடும் தலைவியர்பால் 'கூஜிதம்' (- புள்ளொலி) நிகழுமென்பவாகலின் இது குற்றமாகாது குணமாம்.

## 8. அப்ரதீதம்.

ஶாஸ்த்ரோக்தஶப்தஸம்க்காதவ்யதீதம் யதுச்யதே ।
குணகம் தஸ்ய தத்விஜ்ஞஸம்பாஷாஸு விதுர்புதா: ॥ ॥

சாஸ்திரங்களில்மட்டும் வழங்கும்சொல்லைக் காப்பியத்தில் வழங்குதல் 'அப்ரதீதம்' என்னும் குற்றமாம் என்று முன்கூறப் பட்டது; சாஸ்திரநூல்வல்லவர்களின் சம்பாஷணையைக்கூறுவது போன்ற இடங்களில் அது குற்றமாகாது குணமாம்.

உதாரணம்:—

ஸர்வகாயஶரீரேஷு முக்தாஙகஸ்கந்தபஞ்சகம் ।
ஸௌகதாநாமிவாத்மாந்யோ நாஸ்தி மந்த்ரோ மஹீப்ருதாம் ॥

ஸமஸ்தமான கார்யசரீரங்களிலும் ஐந்து அங்கஸ்கந்தங்களை யும் விட்டு வேறு ஆன்மா ஸௌகதர்களுக்கு இல்லாததுபோல, அரசர்களுக்கு ஐந்து அங்கஸ்கந்தங்களையும் ஒழித்து வேறு மந்தணம் இல்லை.

இங்கேகூறிய ஐந்து அங்கஸ்கந்தங்கள் சாத்திர(நூல்)வழக்கிலன்றி உலகவழக்கிற் பயிலாதவை; ஆதலால், இது 'அப்ரதீதம்' என்னும் குற்றம்போற்றோன்றுமாயினும், இது சாத்திரமறிந்தோர் கூற்றுயமைந்திருத்தலாற் குற்றமாகாது குணமாம்.

## 9. க்லிஷ்டம்.

𑌅𑌪𑍍𑌰𑌤𑍀𑌤𑌿𑌕𑍃𑌦𑍍𑌦𑍂𑌰𑍇 𑌕𑍍𑌲𑌿𑌷𑍍𑌟𑌂 𑌨𑌾𑌤𑌿𑌪𑍍𑌰𑌯𑍁𑌜𑍍𑌯𑌤𑍇 ।
𑌸𑍍𑌫𑍁𑌟𑌤𑍍𑌵𑌪𑍍𑌰𑌤𑍀𑌤𑍇𑌸𑍍𑌤𑌤𑍍𑌗𑍁𑌣𑌤𑍍𑌵𑌂 𑌪𑍍𑌰𑌪𑌦𑍍𑌯𑌤𑍇 ॥ ௧௮

ஒருபொருளைக் கூறுங்கால் அதற்குரிய சொல்லால் நேரே கூறாது,(விளம்பித்துப்பொருளுணருமாறு)சுற்றுநெறியால்தொடர் பொருள்பற்றிக் கூறுதல் 'க்லிஷ்டம்' என்னும் குற்றமாமென முன்பு கூறப்பட்டது; அங்ஙனம் நேரேகூறாது தொடர்பொருள் பற்றிக் கூறினும், பொருள் விரைவில் உணரப்படுமாயின் ஆண்டு அது குற்றமாகாது குணமாம்.

**உதாரணம்:—**

𑌅𑌥𑌾𑌤𑍍𑌮𑌨𑌃 𑌶𑌬𑍍𑌦𑌗𑍁𑌣𑌂 𑌗𑍁𑌣𑌜𑍍𑌞𑌃
𑌪𑌦𑌂 𑌵𑌿𑌮𑌾𑌨𑍇𑌨 𑌵𑌿𑌗𑌾𑌹𑌮𑌾𑌨𑌃 ।
𑌰𑌤𑍍𑌨𑌾𑌕𑌰𑌂 𑌵𑍀𑌕𑍍𑌷𑍍𑌯 𑌮𑌿𑌥𑌃 𑌸 𑌜𑌾𑌯𑌾𑌂
𑌰𑌾𑌮𑌾𑌭𑌿𑌧𑌾𑌨𑍋 𑌹𑌰𑌿𑌰𑌿𑌤𑍍𑌯𑍁𑌵𑌾𑌚 ॥

நற்குணங்களையறிந்த இராமன், சத்தத்தைக் குணமாகக் கொண்டதும் தன்னுடைய பதமாயுள்ளதுமான ஆகாசத்தை விமானத்தால் கடந்துகொண்டு, சமுத்திரத்தைக் கண்ணுற்றுத் தன்மனைவியைநோக்கி, இரகசியமாக இவ்வாறு கூறுவானானன்.

இங்கே, தன்பதம் என்றதால் விஷ்ணுபதம் என்றும் சப்த குணம் என்றதால் ஆகாசம் என்றும் தாமதியாது பொருள் விரைவில் தோன்றுகின்றதாகையால் இவ்வாறு கூறுதல், 'க்லிஷ்டம்' என்னும் குற்றமாகாது குணமாம்.

## 10. கூடார்த்தம்.

𑌅𑌪𑍍𑌰𑌸𑌿𑌦𑍍𑌧𑌾𑌰𑍍𑌥𑌸𑌂𑌬𑌦𑍍𑌧𑌂 𑌯𑌦𑍍𑌗𑍂𑌢𑌾𑌰𑍍𑌥𑌮𑌿𑌤𑌿 𑌸𑍍𑌮𑍃𑌤𑌮𑍍 ।
𑌤𑌸𑍍𑌯𑌾𑌖𑍍𑌯𑌾𑌨𑌾𑌦𑌿𑌷𑍁 𑌪𑍍𑌰𑌾𑌯𑍋 𑌗𑍁𑌣𑌤𑍍𑌵𑍇𑌨 𑌨 𑌦𑍁𑌷𑍍𑌯𑌤𑍇 ॥

பிரஸித்தியற்ற பொருளுடைய வழக்கு 'கூடார்த்தம்' என்னும் குற்றமுள்ளதாக முன்பு கூறப்பட்டது; அவை பொருள்விளக்கப் படுமிடங்களில் குணமாகவே கொள்ளப்படுகின்றன.

உதாரணம்:—

𑌅𑌸𑍍𑌮𑌾𑌦𑍃𑌶𑌾 𑌅𑌪𑌿 𑌕𑌵𑌯𑌃
𑌕𑌵𑌯𑍋 𑌹𑌰𑌿𑌵𑍃𑌦𑍍𑌧𑌶𑌾𑌲𑌿𑌪𑍍𑌰𑌮𑍁𑌖𑌾 𑌅𑌪𑌿 ।
𑌮𑌣𑍍𑌡𑍂𑌕𑌮𑌰𑍍𑌕𑌟𑌾 𑌅𑌪𑌿
𑌬𑌹𑍁 𑌭𑌵𑌨𑍍𑌤𑌿 𑌹𑌰𑌿𑌸𑌰𑍍𑌪𑌸𑌿𑌂𑌹𑌾 𑌅𑌪𑌿 ॥

நம்போன்றவர்களும் கவிகள், ஹரி விருத்தசாலி முதலியோரும் கவிகள்; தவளை குரங்குகளும் ஹரிகள், திருமாலும் நாகமும் சிங்கமும் ஹரிகள்.

[திருமால் சிங்கம் இவற்றுக்குரிய ஹரி என்னும் பெயரால் தவளை குரங்கு முதலியவையும் நிகண்டுகளில் குறிக்கப்படுவது போல, விருத்தசாலி முதலிய பெருங்கவிகளைக் குறிக்கும் கவி என்னும் சொல்லால் அற்பர்களாகிய நாமும் குறிக்கப்படுகிறோம் என்று கூறியவாறு.]

இங்கே, ஹரி என்ற சொல்லுக்குத் தவளை குரங்கு பாம்பு முதலிய பொருள்கள் பிரஸித்தமாக வழங்கிவராதிருப்பினும், அப்பொருள் அச்சொல்லுக்குண்டென்று கூறுவோனே விளங்க வைத்தமையால் ஈண்டுப் பொருளுணர்ச்சி தடைப்படாமையின், இது 'கூடார்த்தம்' என்னும் குற்றமாகாது குணமாயிற்று.

## 11. நேயார்த்தம்.

𑌨𑍇𑌯𑌾𑌰𑍍𑌥𑌂 𑌯𑌤𑍍𑌸𑍍𑌵𑌸𑌙𑍍𑌕𑍇𑌤𑌕𑍢𑌪𑍍𑌤𑌵𑌾𑌕𑍍𑌯𑌂 𑌨𑌿𑌰𑍂𑌪𑌿𑌤𑌮𑍍 ।
𑌪𑍍𑌰𑌹𑍇𑌲𑌿𑌕𑌾𑌦𑌿𑌷𑍁 𑌪𑍍𑌰𑌾𑌯𑍇𑌽𑌸𑍍𑌯 𑌗𑍁𑌣𑌤𑍍𑌵𑍇𑌨 𑌮𑌨𑍍𑌯𑌤𑍇 ॥

தானே ஒருசொற்கு ஒருபொருளின்கண், புதிதாக ஆற்றலை உண்டாக்கிக்கொண்டு வழங்குவது 'நேயார்த்தம்' என்னும் குற்றமாமென்று முன்பு கூறப்பட்டது. பிரஹேளிகை முதலிய இடங்களில் அறிஞர்களால் அது குணமாக எண்ணப்படுகின்றது.

உதாரணம்:—

ஶிகீ யச்சூர்பேண வஹதி தஸ்ய நாம்நா ஸத்ருஶநாமா ।
உஶீர்ஷாத் வாடாக்ரம் ப்ரதி யாதி ராத்ரௌ நௌகா ॥

மயிலானது தோகையால் எதைத் தரிக்கின்றதோ அதன் பெயருக்கு ஒப்பான பெயரையுடையவன் இரவில் ஓடத்தைப் போன்றவனைத் தலைப்பக்கத்திலிருந்து காலின்பக்கத்திற்குச் சென்றுவிட்டான்.

'உஶீர்ஷம்' என்பது, படுப்போர் கிழக்கே தலைவைத்துப் படுக்கவேண்டுமென்று நியமமுண்மையிற் கீழ்த்திசையைக் குறிக்கும். 'வாடாக்ரம்' என்பது, படுப்போர் மேற்றிசையைநோக்கிக் கால்நீட்டிப் படுக்கவேண்டுமாதலின் மேற்றிசையைக் குறிக்கும். இங்ஙனம் அத்திசைகளுக்குப் பிறஇடங்களில் வழக்கின்றியிருப்பினும், புதிதாகப் படைத்துக்கொண்டு வழங்கப்பட்டது. மயிலின் தோகையால் தரிக்கப்படுவதன் பெயர்போன்ற பெயருடையோன் என்பதனாலும், ஓடத்தை உவமைசொல்லியவதனாலும், குறைமதி என்பது போந்தது.

இவையெல்லாம் 'நேயார்த்தம்' என்னும் குற்றத்தின்பாற்படுமாயினும், இது பிரஹேளிகை (-பிசி-விடுகதை) ஆதலால் குணமேயாம்.

[தொடரும்]

V. S. ராமஸ்வாமிசாஸ்திரி, B.A., B.L.

மதுரை.

# கம்பராமாயணசாரம்.

[௩௦௪-ஆம் பக்கத் தொடர்ச்சி]

## அதிகாயன்வதைப்படலம்.

*இராவணன்மகன் அதிகாயன்கொல்லப்பட்டதைக் கூறுவது.*

*(அதி - அதிகம் - மிகுதி. காயம் - தேகம். அதிகாயன் - பெரிய உடலை யுடையவன்.)*

### அதிகாயன்சபதம்.

[ *இராவணன், மந்திரிகள் முதலானோரை நோக்கி, 'என் தம்பியைக் காக்கத்தவறிவிட்டீர்கள். காக்கமுடியவில்லையானாலும், அம் முயற்சியில் உயிரைக்கொடுக்கவேனும் செய்திலீர். யான் என் வெற்றியினாற் பெற்ற செல்வத்தை அனுபவித்தீர்களேயன்றி உங்கள் கடமையைச் செய்தீர்களில்லை' என்று கோபமும் தாபமும் தோன்றக் கூறினான்.*

*அப்போது இராவணனுக்குத் தானியமாலை யென்னும் மனைவியிடத்துப் பிறந்த அதிகாயன், இராவணனைநோக்கி, '(இராமன் தம்பியை உன் தம்பியாக்கி, இராமனை நீ யாக்குவேன்: எவ்வாறெனில்,) இராமன் கும்பகருணனைக்கொன்று உன்னை வருந்தச் செய்ததுபோல, யான் இலக்குமணனைக்கொன்று இராமனை வருந்தச்செய்வேன். அவ்வாறுசெய்யேனேல், உன்மகனல்லேன்' என்று சூளுரைத்து, 'யான் போர்க்குத் தனியே போகவோ? படையோடு போகவோ? உன் கட்டளை யாது?' என்றான்.*

### அதிகாயன் போர்க்களம்புகுதல்.

*இராவணன், 'நன்றுகூறினாய். நீ இலக்குமணனைக் கொல். யான் இராமனைக் கொல்வேன். கும்பனும் நிகும்பனும் அகம்பனும் உனக்குப் பாதுகாவலாக வருவார்கள். பல்வகைப்படைகளோடு செல்க' என அதிகாயனுக்கு விடைகொடுத்தான்,*

4

படைவீரர்கள் வீரமுழக்கஞ்செய்து ஆர்த்தார்கள். பூமி நெளியும்படி கால் பேர்த்தார்கள்: விரைந்துசெல்வதாலுண்டாகிய புழுதியினால் பூமியைப் போர்த்தார்கள். அவர்களைக் கண்டு அச்சத்தினால், அமரர்கள் வேர்த்தார்கள்.

போர்க்களம்புகுந்த அதிகாயன், தோளும் தாளும் அறப் புண்டு மாண்டு மலைபோலக் கிடந்த கும்பகருணன் உடலைக் கண்டு, 'தலையைக் கண்டிலேனே' யென்று தயங்கி வருந்தினான். பின்பு, 'நான் கும்பகருணனிறந்ததுகண்டு வருந்துந் துயரம், இலக்குமணனைக் கொன்று, இராமன்வருந்தக்கண்டாலன்றி நீங்காது' என்று கூறி, மயிடன் என்ற தூதனை நோக்கி, 'நீ இலக்குமணனிடம் சென்று, நான் என் தந்தை தம்பியையிழந்துவருந்துதலைப் போக்குதற்பொருட்டுப் போர்க்குவந்திருக்கின்றேன். அன்றியும், இலக்குமணனைக் கொல்வதாக, இராவணன்சபையில் சபதம் செய்திருக்கின்றேன்: என்று கூறி இலக்குமணனைப் போருக்கு அழைத்துவா. அவனல்லாமல் என்னோடு பொருதற்கு விரும்புவாரெல்லாரையும் கூட்டிக்கொண்டுவா. அவர்களெல்லோரையும் எமபுரத்துக்கு அனுப்புவேன். நீ இலக்குமணனைக் கொண்டுவந்துவிட்டாயானால், உன்னை ஓர் அரசனாகச்செய்வேன். வேறு அளவற்ற விலைபெற்ற வெகுமதிகளும் அளிப்பேன். போய்வா' என்றான்.

## மயிடன்தூது.

மயிடன், இராமனிடம் செல்ல, இராமன் 'நீ வந்தது யாது கருதி?' என, அவன், 'இலக்குமணனிடம் தூதுரைக்கவந்தேன்' என, இலக்குமணன் 'உரைக்கவந்ததை உரை, உரை' என விரைவாக வினவ, 'அதிகாயன் உன்னோடு போர்புரியவிரும்புகின்றான். அவனை எதிர்க்கவல்லாயெனில் என்னோடு வருவாயாக. கும்பகருணனுடலை உன் தமயன்செய்தபடி உன் உடலைத் தான் செய்தற்கு வந்திருக்கின்றான். கொன்றவனைவிட்டுக் கொல்லாது நின்றவனைத் தேடிவந்த காரணம் யாதெனில், தம்பியையிழந்து தன் தந்தை வருந்துவதுபோல், உன்னையிழந்து உன் தமையன் வருந்தும்படிசெய்வதென்பது' என்றான்.

இராமன், இலக்குமணனைத் தழுவிப் போர்புரிய விடையளித்தான்.

## விபீடண ராமர் பேச்சு.

அப்போது, விபீடணன், 'இந்த அதிகாயன், தேவர் அசுரர் முதலியோர் செய்யும் போரிலே சாவாதிருக்கவும், சலியாத வலியோடிருக்கவும் வரம்பெற்றவன்: (மூன்றுகண்களுடைய) ஏகதேவனோடு பெரியவெள்ளிமலையைப்பேர்த்தெடுத்த இராவணனால் (ஆயிரங்கண்களுடைய இந்திரன் முதலிய) அநேக தேவரோடு பொன்மலையாகிய மிகப்பெரிய மேருமலையை வேருடன் பேர்த்தெடுக்கும் பெருவலி பெறும்படி பேணிவளர்க்கப்பெற்றவன். முன்னாளில் மது கைடவர் என்ற அசுரர், திருமாலோடு நெடுநாள்வரை வெற்றி தோல்வியின்றிப் பொருது, திருமாலின் சலியாமையைக்கண்டு வியந்து, 'எங்களுள் ஒவ்வொருவரும் இந்த உலகமேழையும் ஒருங்கே உண்டுமிழவல்லேம். அத்தகைய இருவருடன், நீ ஒருவனே தனியாக நெடுநாள் பொருதாய். உனக்கு வேண்டும் வரங்கேள். தந்தோம்' என, திருமால், 'என்னால் நீங்கள் கொல்லப்படும் வரம் வேண்டும்' என்று பெற்று, அவர்களிருவரையும் கொன்றான். அந்த மது கயிடவர்களில், மது கும்பகருணனாகவும், கயிடவன் அதிகாயனாகவும் பிறந்தார்கள். (இவ்விருவரும்) இராவணனையுள்ளிட்ட இராக்கதரெல்லாரினும் மிகவும் பெரிய உடல்படைத்தவர்கள்' என்றான்.

இராமன், விபீடணனைநோக்கி, '(அதிகாயனோடு இலக்குமணன் தனியே பொருதற்குவல்லனோ? என்று சந்தேகிக்கின்றாய் போலும்.) இவன் எண்ணாயிரகோடி இராவணர் எதிர்ப்பினும் தனியே பொருது வெல்லவல்ல "கூட்டொருவரையும்வேண்டாக் கொற்றவன்"; ஆயினும், நீ துணையாகப்போ' என்றான்.

## இலக்குமணன் போர்க்குப்புறப்படல்.

இலக்குமணன் இராமனைவணங்கி, விபீடணன் மெய்காவலனாக உடன்செல்ல, போர்க்களம் போய்ச்சேர்ந்தான்.

## போர்.

வானரசேனையும், இராக்கதசேனையும் எதிர்ந்தன. போர்ப் பறையொலி, சங்கொலி, வீரர் ஆர்ப்பொலி, வில்லின்நாணொலி யெல்லாஞ்சேர்ந்து கடலொலியை அடங்கச்செய்தன. இரண்டு சேனைகளும் ஒன்றையொன்று தாக்கின. வானரர் கையாலும் காலாலும் வாலாலும் இராக்கதர் இறந்தனர். இராக்கதர் வில்லா லும் வாளாலும் வேலாலும் வானரர் மாண்டனர். வானரரால் இராக்கதர்மேலெறியப்பட்ட மரங்கள் மலைகள் யானைகள்: ஆகாய வழியே சென்றபோது, ஆகாயம், மரம் மலை யானைகளுடைய வனம்போன்றது.

போர்முடிவில், வானரர் தோற்றோடினர். அப்போது, இலக்கு மணன், 'அஞ்சாதிர்கள்' என்று அபயவார்த்தைகூறி, வானரரை நிறுத்தி, அம்புகளெய்து அரக்கர்சேனையை அழித்தான். (தங்கள் தலைவனான இராவணனால்) 'சீதையென் றொரு கொடுங்கூற்றம்* தேடினார்' ஆன அரக்கர், அப்பன்மாரும் அண்ணன்மாரும் தம்பி மாரும் மக்கள்மாரும் மருமக்கள்மாரும் பேரன்மாரும் அந்த அம்புகளால் கொல்லப்படத் தாமும் கொல்லப்பட்டனர். இராக்கதர் பெருந்திரளாக இலக்குமணனால் இறந்ததுகண்டு, தாருகன், முதலில் வந்து பொரப் பின்பு காலன், குலிசன், காலசங்கன், மாலி, மருத்தன்: என்ற ஐவரும் பொர, இலக்குமணன் எல்லோரையும் கொன்றான்.

## அதிகாயன்சேனை இலக்குமணனை வளைந்து பொருதல்.

அதிகாயனுடைய சேனைவீரர், இலக்குமணனைவளைந்து கை விடுபடைகளாலும் கைவிடாப்படைகளாலும் வானரரைத்தாக்கி அழிக்கலுற்றனர். இலக்குமணன் அவ்வாயுதங்களையும் அவை களைச் செலுத்திய கைகளையும் அறுத்தெறிந்தான்.

## இலக்குமணன் யானைப்படைகளை வெல்லல்.

(இராக்கதருள் பெருந்தேகியான அதிகாயனுக்குப் பொருத்த மாக, பிராணிகளுள் பேருடலுடைய யானைப்படைகள் மற்றைய சேனைத்தலைவர்களுக்குக்காட்டிலும் அதிகமாக இருந்தனபோலும்.

---

* கூற்றம் - எமன்.

அந்த) யானைப்படைகள் முதல்முறை பெருங்கூட்டமும், இரண்டாம்முறை அதனினும் அதிகக்கூட்டமும், மூன்றாம்முறை முன்னைய இரண்டுகூட்டத்தினும் பெரியகூட்டமுமாகவந்து, இலக்குமணனை வளைந்து எதிர்த்தன. அந்த யானைக்கூட்டங்கள் மேகசாலங்கள்* போன்றன. கறுத்த யானைகள் சூழ்ந்த (பொன்னிறமுடைய) இலக்குமணன், கார்மேகநடுவே விளங்கும் செங்கதிரோன் போன்றான். (விண்ணினின்று நோக்கிய தேவர்களுக்குமே) கண்ணுக்கெட்டுமட்டும் யானைகளே காணப்பட்டதனால், உலகமுழுதுமே யானைகளாக உருமாறிவிட்டதோ! என்று யாவரும் அஞ்சினார்கள். இலக்குமணன், அந்த யானைக்கூட்டங்களை அம்புக்கூட்டங்களால் அழித்தான். மலைகள், தாங்கள் கரியபெரிய யானை போன்றிருத்தலால், இலக்குமணன் அம்புகள் தங்களையும் அழித்துவிடுமோவென்று அஞ்சின. அவ்வாறே மேகங்கள் அஞ்சின; வனங்கள் அஞ்சின; கடல்கள் அஞ்சின; திசையானைகள் அஞ்சின; இவைபோல்வன வேறுசிலவும் அஞ்சினவென்பானேன்; யானைமுகமுடைமையால் தனக்கும் இலக்குமணன் அம்பால் கொலைநேருமோவென்று விநாயகக்கடவுளே அஞ்சும்படியிருந்ததென்றால்.

## அனுமான் ஆனைகளை அழித்தல்.

(இலக்குமணனை எதிர்க்கவந்த யானைப்படைகளுள் இறுதிப் பெருந்தொகுதியை அழிக்கும் இலக்குமணன் அம்புகளுக்குத் துணையாக, யானும் அழிப்பேனென்று) அனுமான் வந்து ஒருபெருமரத்தைப் பிடுங்கித் தண்டாகக்கொண்டு மலைகள்மேல் இடிகள் இடித்தாற்போல யானைகளை அடித்தும், காலாலும் வாலாலும் கையாலும் பல்லாலும் ஊறுசெய்தும் அழித்தான்.

## அனுமான் தேவாந்தகனைக் கொல்லல்.

அப்போது, தேவாந்தகனென்பவன் எதிர்ந்து பல அம்புகளை அனுமான்மேல் அழுந்தும்படி எய்தான். இவன், அவன்மேற் பருந்துபோற் பாய்ந்து வில்லை முறிக்க, அவன் தோமரமெறிய, அதை இவன் பறித்தெறிய, அவன் சூலப்படை தொடுக்கத் தொடங்க, இவன் அவனைக் கன்னத்திலறைந்து கொன்றான்.

---

* சாலம் - கூட்டம்.

### அனுமான் திரிசிரனைக் கொல்லல்.

அதுகண்டு, அதிகாயன் அனுமானையெதிர்ந்து 'அக்கனைத் தேய்த்துமாய்த்த உனக்கு அந்தியகாலம் வந்துவிட்டது. யாரையும் வென்றாலன்றி மீளாத என் அம்புகளால், உன்னையும் இலக்குமணனையும் கொன்றாலன்றி மீளேன்' என, அனுமான், 'என்னோடு பொருவதற்குத் துணையாகத் திரிசிரனையும் அழைத்துக்கொள்' என, அதைக்கேட்ட திரிசிரன், 'இதோ! வந்தேன் என்று சொல்லிக்கொண்டே வந்து எதிர்த்தான். அனுமான் அவனைத் தரையில் விட்டரைத்துக்கொன்றுவிட்டு மேற்றிசைவாயிலுக்குச் சென்றான்.

### அதிகாயன் இலக்குமணனை எதிர்த்தல்.

அதுகண்ட அதிகாயன், அனுமானைத் தன்மனத்துள்ளே வியந்து, இலக்குமணன்நின்ற இடத்துக்குத் தேரைச்செலுத்தினான். இலக்குமணன், அங்கதன்வேண்டுகோளுக்கிசைந்து, அவன் தோள்மீதேறி, அதிகாயனை எதிர்ந்து சரமாரிபொழியத் தேர்ப்படை யானைப்படை குதிரைப்படை காலாட்படை யெல்லாம் அழியலுற்றன.

### இலக்குமண அதிகாயர் வினாவிடை.

அப்போது, இலக்குமணன், அதிகாயனை நோக்கி, 'உன்படையழியப் பார்த்துக்கொண்டு சும்மாநிற்கின்றாயே. உன்சேனையெல்லாம் சின்னபின்னமானபின்பு, போர்செய்யப்போகிறாயா? சேனை அழியாமல் நீ தனியாக என்னோடு பொரக் கருதுகிறாயா? எது உன் விருப்பு'? என்று வினவினான்.

அதிகாயன், 'வேறெவரும் பொரவேண்டியதில்லை. நீயும் நானுமே பொருவோம். அவ்வாறுசெய்தற்கன்றோ, நான் உனக்குத் தூதனுப்பினேன். நான் தனியே பொருவேன். உன்னைக் காப்பார் உனக்குத்துணையாகப் பொருவதை நான் தடைசெய்யவில்லை. உன்னை உன் தமயன் காக்கட்டும், உமையொருபாகனே காக்கட்டும், உம்பரெல்லாரும் காக்கட்டும், உலகம் ஓரேழுமே காக்கட்டும். இவர்களெல்லாரும் காத்தாலும், இன்றோடு உன் வாழ்க்கை முடிந்துவிடும்' என்றுகூறி, வில்நாணைத் தெறித்து ஒலியெழுப்பி ஆரவாரித்தான்.

இலக்குமணன், குறுஞ்சிரிப்புக்கொண்டு 'நீ சொன்னவர்கள் யாரும் வாரார். யானே பொருது, தோற்கும்படிநேர்ந்தால் தோற்பேன். நீ என்னைவென்றாயானால், அவரெல்லாரையும் சேர வென்றாயாவாய்' என்றுகூறி ஓரம்பை எய்தான்.

அந்த ஒற்றையம்பை அதிகாயன் ஒற்றையம்பால் அறுத்தொழித்துவிட்டு, 'இலக்குவ! இவற்றினை விலக்குதி'* என்று பதினாறுபாணங்கள் விட்டான். இலக்குமணன், அவ் அம்புகளைத் தன் அம்புகளால் அறுத்தெறிந்தான்.

இவ்வாறு, இருவரும், மாறிமாறிப் பலமுறை அம்புகளை எய்தலும், கொய்தலும் செய்தனர். இறுதியாக, இலக்குமணன், தெய்வவாளிகளை எய்தான். அவை, அதிகாயன் கவசத்தைப் பிளந்து அவன் உடம்பைத் துளைத்தன. அதனால், அவன், சோர்ந்து, தன் வில்லைத் தேரில் ஊன்றி, அதனை முட்டுக்காலாகக் கொண்டு, தான் தேறும்வரையும் அதன்மேற் சாய்ந்துநின்று இளைப்பாறினான்.

அப்போது, இலக்குமணனுடைய பாணங்கள், கணக்கில்லாதவை, பறப்பதையும், பிணக்காடாகத் தன்படைகள் இறப்பதையும் கண்டான். கண்டவன், மயக்கந்தீர்ந்தவுடனே, அளவற்ற அம்புகளை எய்து, மலையும் கடலும் மண்ணும் விண்ணும் எங்கும் அம்புமயமாகச் செய்தான்.

போரைப்பார்த்துக்கொண்டிருந்த தேவர்கள், 'வானரசைனியம் இன்றே முடிந்துவிடும். இவனை இலக்குமணன் வெல்லவல்லனல்லன். இவன் கொலைத்தொழிலைக் காலனிடத்தே கற்றுக்கொண்டான்போலும். இவன் விற்றொழிற்றிறமையை எற்றென† மொழிவோம்' என்று, வியப்பையும் பயத்தையும் அடைந்தார்கள்.

அதிகாயன், அங்கதன் நெற்றியிலும் தோளிலும் மார்பிலும் பலகணைகளை அழுந்த எய்து, மூன்றுகணைகளை இலக்குமணன் மேல் ஏவி, விண்ணவர் வெருவ வீரமுழக்கஞ்செய்தான். அதுகண்ட

* விலக்குதி - விலக்குவாய். † எற்று - எத்தன்மைத்து.

இலக்குமணன், பல அம்புகளெய்து, அதிகாயன் தேர்க்குதிரைகளின் தலைகளும் தேர்ப்பாகன் தலையும் அவன் பிடித்திருந்த வில்லும் அறும்படிசெய்தான். அவன், வேறு தேரும் வில்லும் கொண்டு பொருவானாக, இலக்குமணன், ஆக்கினேயாத்திரத்தை* எய்தான். அதற்கெதிராக அதிகாயனும் ஆக்கினேயாத்திரத்தை எய்தான். இரண்டு அத்திரங்களும் ஆகாயத்திலே ஒன்றையொன்றெதிர்த்துப் பொருதுகொண்டிருந்தன. இதன்மத்தியில், இலக்குமணன், இடியினுங்கொடிய பல அம்புகளை யெய்தான். அந்த அம்புகள் அதிகாயனுக்குப் 'பின்நின்றார் முன்நின்றாரைக் காணலாம் பெற்றித்†தாக' அவனுடம்பைச் சல்லடையாகத் துளைத்தன. ஆயினும், அவன், பிராணன் பிரியானாய், ஆற்றல்குறையானாய், அம்புகள் எய்தவண்ணமாக இருந்தான்.

### இலக்குமணன் பிரமாத்திரத்தால் அதிகாயன்தலையை அறுத்தல்.

அப்போது, வாயுதேவன், இலக்குமணனெதிரேவந்து, 'அதிகாயன் பிரமாத்திரத்தினாலன்றிச் சாவான்' என்று சொல்லிப் போனான். வாயுதேவன்சொல்லியவண்ணமே இலக்குமணன், பிரமாத்திரத்தைப் பிரயோகித்து அதிகாயன்தலையை அறுத்தான்.

### இராக்கதசேனைத்தலைவர்களுக்கும் வானரசேனைத்தலைவர்களுக்கும் போர்.

இறந்த அதிகாயனுக்குத் துணையாகப் போருக்குவந்த இராக்கதசேனைத்தலைவர்களுள், நராந்தகனை அங்கதனும், போர்மத்தனை நீலனும், கும்பனைச் சுக்கிரீவனும், நிகும்பனை அனுமானும் பலவாறு பொருது கொன்றார்கள்.

### தோற்ற இராக்கதர் துயரநிலை.

போர்க்களத்தில், இறவாதெஞ்சிய இராக்கதர், ஓடி ஊர்புகுங்கால் வாயிலில் நெருக்குண்டு மாண்டார் சிலர்; புண்பட்ட உடலோடு பாடிவீட்டிலே புகுந்தபோது இறந்தார் சிலர்; தாம் அறிந்தவரை

* ஆக்கினேயாத்திரம் - அக்கினிதேவனை அதிதேவதையாகவுடைய அம்பு.
† பெற்றித்து - தன்மையுடையது.

'எம் உடலில் தைத்திருக்கும் அம்பைப் பறியும்' என்று வேண்ட, அவர்கள் பறிக்க, (அம்புடனேயே) உயிர்நீங்கப்பெற்றார் சிலர்; தம்மை வானரர் தாக்காதபடி வானரவடிவமெடுத்தவர் வானரரென்றே கருதப்பட்டு இராக்கதராலே கொல்லப்பட்டார் சிலர். ]

117 இருகணுந் திறந்து நோக்கி யய[1]லிருந் திரங்கு கின்ற
உருகுதங் காத லோரை யுண்ணுநீ ருதவு மென்றார்
வருவதன் முன்ன மாண்டார் சிலர்சிலர் வந்த தண்ணீர்[2]
பருகுவா[3] ரிடையே பட்டார் சிலர் சிலர்[4] பருகிப் பட்டார்.

கொண்டுகூட்டு: இரு(கண்)ணும் திறந்துநோக்கி, அயல் இருந்து இரங்குகின்ற உருகு(கின்ற) தம் காதலோரை 'உண்ணும் நீர் உதவும்' என்றார்(களுள்ளே) சிலர், (தண்ணீர்) வருவதன்முன்னம் மாண்டார்; சிலர் (வந்த) தண்ணீரைப் பருகுவார் (பருகும்) இடையே பட்டார்; சிலர் சிலர் பருகிப் பட்டார்.

பொருள்: (படுகளத்திலே படுகாயம்பட்டு மூர்ச்சித்துக்கிடந்தவர் பலர்; அவர்களுள்ளே மூர்ச்சை தெளியலுற்றவர்,) இரண்டு கண்களையும் திறந்துபார்த்துத் தம் பக்கத்திலிருந்து அழுது கரைகின்ற (மனைவி மக்கள் முதலிய) அன்பரைக் 'குடிக்கத் தண்ணீர் கொடுங்கள்' என்றவர்களுள்ளே சிலர், தண்ணீர்கொண்டுவருமுன் செத்தார்; சிலர் வந்த தண்ணீரைக் குடிப்பவர்கள் (குடிக்கும்) மத்தியிலே செத்தார்; குடித்துவிட்டுச் செத்தார் சிலர்.

அயல் - பக்கம். இரங்குதல் - அழுதல். காதலோர் - அன்பர். உதவுதல் - கொடுத்தல். படுதல் - சாதல்.

ஈற்றடியில், 'சிலர்சிலர்' என அடுக்கிவந்தது, 'மிகச்சிலர்' என்ற பொருள்குறித்தற்கெனலாம். எனவே, வந்த தண்ணீரைக் குடிக்குமுன்பு செத்தவர் தொகையினும் குடிக்குமிடையிற் செத்தவர்தொகை குறைந்தது. அத்தொகையினும் குறைந்தது குடித்தபின் செத்தவர்தொகையென்று கொள்ளலாம்.

பாடபேதம்: [1] இல். [2] நன்னீர், தெண்ணீர். [3] பருகுவான், பருகுவ. [4] சில சிலர்.

## அதிகாயன் இறந்ததறிந்து இராவணன் வருந்துதல்.

[ *அதிகாயனும் மற்றைய இராசகுமாரர்* முதலியோரும் இறந்ததைத் தூதர் இராவணனுக்குத் தெரிவித்தனர். அவன் (மலைமீது அருவிவழிதல்போல) முகமீது கண்ணீர்வடிவானாகி, ஏக்கம் பொருமல் இரங்கல் மானம் வீரம் என்ற அலைகள் ஒன்றையொன்று தள்ளிக்கொண்டு புரளுகின்ற துக்கசமுத்திரமென்று சொல்லும்படியானான்.* ]

118 திசைகளை[1] நோக்கு நின்ற[2] தேவரை நோக்கும் வந்த[3]
வசைகளை[4] நோக்குங் கொற்ற வாளினை நோக்கும் பற்றிப்[5]
பிசையுறுங் கையை[6] மீசை சுறுக்கொள வுயிர்க்கும்[7] பேதை[8]
நசையிடைக் கண்டா னென்ன[9] நகுமழும் முனியும் நாணும்.

கொண்டுகூட்டு: *திசைகளை நோக்கும்; நின்ற தேவரை நோக்கும்; வந்த வசைகளை நோக்கும்; கொற்ற வாளினை நோக்கும்; கைகளைப்பற்றிப் பிசையும்; மீசை சுறுக்கொள உயிர்க்கும்; நசையிடைப் பேதை(யைக்) கண்டானென்ன நகும்; அழும்; முனியும்; நாணும்.*

பொருள்: (*இராவணன், தான் முன் எட்டுத்திக்கும் சென்று அங்கங்குள்ளவரனைவரையும் வென்று திக்குவிசயஞ்செய்வதற்கிடமாயிருந்த*) *திசைகளை* (*அங்குள்ள, தன்னாற் செயிக்கப்பட்டவர்கள் இப்போது தோல்வியுற்ற தன்னை மதியார்களே யென்ற எண்ணத்தோடு*) *நோக்குவான்.* (*தன்னாற் செயிக்கப்பட்டு, அடிமைகளாகி, ஏவும் வேலைகளைச் செய்தற்குச் சித்தமாய் எதிரே*) *நின்றுகொண்டிருந்த தேவர்களை* (*இவர்கள் இப்போது தன்னைப் பற்றி எவ்வளவு குறைவாக எண்ணுகிறார்களோவென்று*) *நோக்குவான்.* (*தனக்கு*)*நேர்ந்துவிட்ட பழிப்புக்களை யெண்ணிப்பார்ப்பான்.* (*தன்னைத் தோல்வியடையாமற் காக்காத இந்த வாளிருந்து என்ன பயனென்று தன்னிடமிருந்த, சிவபெருமானிடம்பெற்ற*) *வாளினைப் பார்ப்பான்.* (*இந்தக் கேடுகளை மாற்ற நம்மால் ஒன்றுஞ் செய்ய*

---

* *இராசகுமாரர் - திரிசிரன் தேவாந்தகன் நராந்தகனென்னும் இராவண குமாரர்.*

(முடியவில்லையே யென்று) கைகளைப்பிசைவான். மீசைமயிர் தீந்து போகும்படி (வெய்ய) பெருமூச்சுவிடுவான். [அயலானோடு கூடிக் கொண்டிருக்கும்) குற்றத்திடையே தன் மனைவியைக் கண்ட ஒருவன்போலக் கோபமும் (கோபச்) சிரிப்பும் (மானம் இழந்தது பற்றிய) வெட்கமும் (நல்வாழ்விழந்ததுபற்றிய) அழுகையும் உடையவனானான்.

வசை - பழிப்பு. கொற்றம் - வெற்றி. கைபிசைதல், செய்வதறியாது திகைப்பவர்மெய்ப்பாடு. சுறுக்கொளல் - தீய்ந்துபோகுதல். பேதை - பெண், இங்கே மனைவியைக் குறித்தது. நகை - குற்றம்; (இலக்கியச்சொல் லகராதி); இங்கே, கணவனல்லாதவனோடு கூடுதலைக் குறித்தது. நகும் - சிரிக்கும். முனியும் - கோபிக்கும்.

'பேதை நகையிடைக் கண்டான் என்ன' என்பதற்கு 'நகையினாற் பேதைமைக் குணத்தையடைந்தான்போல' என்று பொருள்கூறுவதுண்டு.

பாடபேதம்: [1] திசையினை. [2] நோக்குகின்ற. [3] செய்த, தீரா. [4] வசையினை. [5] வாரிப். [6] கைகள். [7] உறுக்கும், முறுக்கும். [8] பேச. [9] கண்டாலென்ன.

## அதிகாயன்தாய் இராவணன்காலில் விழுந்தழுதல்.

[ இந்த மண்ணைப் பெயர்த்துவிடட்டுமா, அந்த ஆகாயத்தை இடித்துவிடட்டுமா என்றெண்ணுவான். எல்லா உயிர்களையும் எற்றிவிடட்டுமாவென்றெண்ணுவான். (சீதையாலன்றோ தீங்குகளெல்லாம் விளைந்தன. அவளோடு அவள் இனமான) பெண்ணென்ற பெயர்கொண்ட பொருள்களையெல்லாம் பிளந்துவிடுவேன் என்று எண்ணுவான். இராவணன் இவ்வாறு பலபல எண்ணி, புண்ணுள்ளே நெருப்புப்புகுந்தாற்போல, மனம் புழுங்கி நைந்தான். அவன் நிலைமையைக்கண்டு அஞ்சி, எல்லாரும் பேச்சுமூச்சின்றி அழுதுகொண்டிருந்தார்கள். அப்போது, அவன்மனைவி, அதிகாயன்தாய், தானியமாலினி, யார் அழுதலையும் கண்டறியாதவள், பெருங்குரலெடுத்து அலறி அழுதுகொண்டு, மலைமேலே இடியிடித்தாற்போல, மார்பிலே அறைந்துகொண்டு வந்து, அவன் காலிமேல

விழுந்து, துக்கந்தாங்கமாட்டாமல் புரண்டு, பொருமிப் பொங்கி 'ஆ! கொடியவனே! எனக்குக் கேடுசூழ்ந்தாயே!' என்று துடித்துக் 'காட்டாயோ! என்னுடைய கண்மணியைக் காட்டாயோ!' என்று கதறினாள். ]

119 அக்க னுலந்தா னதிகாயன் றன்மாண்டான்[1]
மிக்கதிறத் துள்ளார்க ளெல்லாரும்[2] வீடினர்
மக்களினி னின்றுளான்[3] மண்டோ தரிமகனே
திக்கு விசய மினியொருகாற் செய்வாயோ[4].

கொண்டுகூட்டு: 'அக்கன் உலந்தான்; அதிகாயன் மாண்டான்; மிக்க திறத்துள்ளார்களெல்லாரும் வீடினர்; மக்களினில் நின்றுள்ளான் மண்டோதரிமகனே. திக்குவிசயம் இனி ஒருகால் செய்வாயோ'

பொருள்: 'அட்சகுமாரன் முன்னமே அழிந்திட்டான். அதிகாயன் (இப்போது) இறந்திட்டான். மிக்க திறமையுடையாரெல்லாரும் அழிந்தார்கள். உன்மக்களிலே (சாவாது எஞ்சி) நின்றவன், மண்டோதரிமகன் இந்திரஜித்தே. (இவர்களெல்லாருடையதுணை வலியினால், முன்பு திக்குவிசயம் செய்தாய்.) இன்னும் ஒருமுறை திக்குவிசயம் செய்யவேண்டுமென்றால், செய்யமாட்டுவாயோ? (மேற்கூறிய துணையில்லாமையால் செய்யமாட்டாய் என்றபடி.)

உலத்தல் - அழிதல். வீடுதல் - சாதல்.

பாடபேதம்: [1] தானுலந்தான், நாளுலந்தான். [2] உள்ளாரெல்லாரும். [3] யாருள்ளார்; நின்றுள்ளார். [4] செல்வாயோ, செய்வாயே.

120 ஏதையா சிந்தித் திருக்கின்ற[1] யெண்ணிறந்த
கோதையார் வே[2]லரக்கர் பட்டாரைக் கூவாயோ
பேதையாய்க்[3] காமம் பிடிப்பாய் பிழைப்பாயோ[4]
சீதையா லின்னம் வருவ சிலவேயோ.

கொண்டுகூட்டு: 'ஏது (எதனை) ஐயா, சிந்தித்திருக்கின்றாய்? எண்ணிறந்த கோதை ஆர் வேல் அரக்கர் பட்டாரைக்கூவாயோ! பேதையாய்க் காமம் பிடிப்பாய் பிழைப்பாயோ! சீதையால் இன்னம் வருவ சிலவேயோ!

பொருள்: '(நான் சொல்வதைக் கேட்கிறாயா? கேட்டும் பொருள்தெரிகின்றாயில்லையா? மறுமொழியொன்றுஞ் சொல்லா

திருக்கிறாயே) எதைப்பற்றி எண்ணமிட்டுக்கொண்டிருக்கின்றாய்? (இறந்துபோன) எண்ணிறந்த இராக்கதரை (த் திரும்பிவரும்படி) கூப்பிடமாட்டாயா? அறிவிலியாய்க் காமப்பித்துப்பிடித்த நீ பிழைத்திருப்பாயா? சீதையால் இன்னம் வருவன (வாக உள்ள அநர்த்தங்கள்) சிலவா? (பல இருக்கின்றன).

கோதை ஆர் வேல் அரக்கர் - மாலையணிந்த வேலையுடைய இராக்கதர். பட்டார் - இறந்தார். கூவுதல் - அழைத்தல், பேதை - அறிவில்லாதவன்.

பாடபேதம்: [1] இருக்கின்றது. [2] வில், வல். [3] பேதையாய். [4] பிடித்தார் பிழைப்பாரோ.

121 உம்பி யுணர்வுடையான் சொன்ன வுரைகேளாய்! [1]
நம்பி குலக்கிழவன் கூறு நலமோராய்!
கும்ப கருணனையுங் கொல்வித்தேன் கோமகனை
அம்புக் கிரையாக்கி யாண்டா யரசையா!

கொண்டுகூட்டு: 'உணர்வுடையான் உம்பி சொன்ன உரை கேளாய்! நம்பி குலக்கிழவன் கூறும் நலம் ஓராய்! கும்பகருணனையும் கொல்வித்து என் கோமகனை அம்புக்கு இரையாக்கி அரசு ஆண்டாய் ஐயா!'

பொருள்: '(சீதையை விட்டுவிடு என்று) அறிவாளியான உன் தம்பி விபீடணன்சொன்னதைக் கேட்டாயில்லை! நம் குலத்தாருள் முதியோனான மாலியவான் (விபீடணன் கூறியவாறே) கூறிய நன்மைபயக்கும் வார்த்தைகளைச் சிந்தியாதவனானாய்! (அதே நன்மதி கூறிய மற்றொரு நம்பி) கும்பகருணனைக் கொல்லும்படிசெய்து (அம்மட்டோடு அமையாமல்) என் மகனையும் கொல்வித்து நன்றாய் அரசாண்டாய், ஐயா!'

உம்பி - உன்தம்பி. நம்பி - ஆணிற்சிறந்தோன். நலம் - நன்மை; ஆகுபெயராய் நன்மைதரும்வார்த்தைகளைக் குறித்தது. ஓர்தல் - ஆராய்ந்தறிதல். கோமகன் - அரசகுமாரன்.

இந்தப்பாட்டிலும் இதற்குமுந்திய பாட்டிலும், தானியமாலினி, தன் கணவன் இராவணனை 'ஐயா!' என்று விளித்திருப்பது கவனிக்கத்தக்கது. அவள் துக்கமிகுதியால் கணவனென்ற

எண்ணம் அற்றுப்போக, தன்மகன் சாதற்குக் காரணமானவ னென்ற எண்ணமே அவள்மனத்தில் முனைந்துநின்றதனால், அவனை அந்நியனென, வேண்டுமென்றெண்ணாமல், இயல்பாக எண்ணி, 'ஐயா' என விளித்தாளென்பது போதரும். அவள் அவனைக் 'கொடியவனே' என்றதும் இக்காரணம்பற்றியே யென்லாம்.

பாடபேதம்: [1] கொள்ளாய், உள்ளாய்.

தானியமாலினியைத் தேவமாதர் அந்தப்புரத்துக்குக் கொண்டுபோதல்.

[ மேற்கூறியவாறும் வேறு பலபலவாறும் புலம்பிக்கிடந்த தானியமாலினியை மேனகை ஊர்வசி முதலிய தேவதாதிகள் எடுத்துத் தாங்கிக்கொண்டுபோய் அந்தப்புரத்திற் சேர்த்தார்கள். அவள் துயரங்கண்டு, இராக்கதமகளிரேயன்றி, விரோதிகளாய் அடிமைகளாயிருந்த தேவமகளிரும் தங்கள் தங்கள் பிள்ளைகளையிழந்தாற் போல வருந்தினார்கள். இலங்கைக்கு (வெளியே நீர்க்கடல்—ஜலசமுத்திரம்—அலை ஒலி மிகுத்திருந்ததுபோல) உள்ளே, மக்கட் கடல்—ஜனசமுத்திரம்—அழுகையொலி மிகுத்திருந்தது. ]

அதிகாயன்வதைப்படலம் முற்றிற்று.

[தொடரும்]

வெ. ப. சுப்பிரமணியமுதலியார்.

---

# பிழையும் திருத்தமும்.

## செந்தமிழ்.

| தொகுதி. | பக்கம். | வரி. | பிழை. | திருத்தம். |
|---|---|---|---|---|
| ௩௭ | ௧௮௦ | கடைசிவரி | கிருகணசர்ப்பம் | கிருஷ்ணசர்ப்பம் |
| ௷ | ௨௩௪ | 5 | இனி | இனிய |

# யவனர்வரலாறு.

[ஸ்ரீ. த. இராமநாதபிள்ளை, B.A., (LOND.) அவர்கள்.]

[௩௧௧-ஆம் பக்கத் தொடர்ச்சி.]

## பிறநாட்டுவரலாறு.

இக்காலத்தில் பார்சியநாட்டில் ஆட்டசாக்கிஸ் அரசாண்டான். அவனுடைய ஆட்சியில் சமயக்கட்சிகள் பல்கின. பூசாரி ஒருவன் மதுவைக் குடித்து அயர்ந்தான். எழுந்தபின் தான் சுவர்க்கம் சென்றதாகவும் பழைய சுரூஸ்தியசமயமே உண்மையானதென அறிந்ததாகவும் உரைத்தான். அக்கதையைப் பல கட்சியினரும் நம்பிப் பழைய வழிபாட்டை நாட்டினர். சுரூஸ்தியருடைய மதத்தைப்பற்றி யவனவாசிரியன் கரடோற்றஸ் பின்வருமாறு கூறுகின்றனன். காலம் ஆதியும் அந்தமும் இல்லாத ஒரு திரவியமெனவும் புத்தி (மனம்) என்பது அகண்டாகாரப்பொருளெனவும் நன்மை தீமை புத்தியினின்றும் தோன்றியவெனவும் ஓர்மத்து என்னும் நன்மையும் அக்கிரமம் என்னும் தீமையும் யாண்டும் போராடுகின்றனவெனவும் சுரூஸ்தியர் செப்பினர். கோயில்களில் தெய்வங்களை வணங்காமல் மலையே தேவரின் இருப்பிடமென எண்ணினர் போலும். சுரூஸ்தியர் அக்கினிவழிபாடுசெய்தனரெனவும் சொல்லப்படுவர். பார்சியர் யாவரும் எரியையும் ஒளியையும் வழிபட்டனர்.

இம்மதத்தைத் தவிர்த்து ஏனையமதங்களை ஆட்டசாக்கிஸ் கண்டித்தான். அவனுடையஆட்சி யூபிறெற்றிஸ் நதிதொடங்கி இந்துநதிவரையும் சென்றதாம். கி. பி. 233-ல் அவன் உரோமர் தனிக்கோலன் அலெச்சாந்தரை வென்றிருத்தல்வேண்டுமென ஊகிக்கப்படுகிறது. அவன்மகன் சப்போர் அரசுகட்டில் ஏறினன். பார்சியர்படையுடன் பூசாரிகளும் வித்திலரும் பணியாளரும் சென்றதால் படையினதுவீரம் சிலசமயங்களிற் கேடுற்றது.

பார்சியக் குதிரைப்படை மிகப் புகழ்பெற்றது. பார்சியர் கிழக்குத் திசையில் உரோமராட்சியை அழிக்கமுயன்றனராக, சர்மானியரும் கொத்தரும் மேற்குத்திசையில் எழுந்தனர். றையின் நதிதொட்டு தானியூபி ஆறுவரையும் கானவராகிய சர்மானியரும் கொத்தரும் உலாவினர். அந்நாடுகளிலிருந்த சர்மானியர் குளிர் தாங்கமுடியாமல் தென்னாடு நோக்கினர். சரித்திரவாசிரியன் ரசிற்றஸ் மொழிந்தவாறு சர்மானியர் முற்காலங்களில் ஆடு மாடு மேய்த்துச் சமவெளிகளிலே வசித்தனர். உண்பதும் உறங்குவதும் குடிப்பதும் போர்புரிதலுமே அவர்கள் தொழில். சர்மானியர் சுவாதீனமாக இருக்கவிரும்பும் சாதியார். அடிமைச்சாதியாக ஒருபோதும் இரார். சர்மானியப்பெண்கள் இல்லப்பணிகளைச் செய்து பத்தினிகளாயிருந்தனர். சர்மானியர் சூரியசந்திரரை வணங்கினர். இச்சர்மானியர் உரோமருடைய போர்முறைகளில் பயின்று உரோமரை எதிர்த்தனர்.

## உண்ணாட்டுவரலாறு.

கி. பி. 249-ல் மச்சிமஸ் என்பவன் பிலிப்போடு விரோதித்தான். காவலர் பிலிப்பைக் கொன்று டேசியஸ் என்பவனை வேந்தனாக்கினர். டேசியஸ் கொத்தரோடு போர்புரிந்தான். கொத்தர் டேசியனையும் அவன் மகனையும் வென்றனர். டேசியன்மகன் கஸ்திலியன் அரசனானான். அவனுடைய அமைச்சன் கல்லஸ் என்பவன் பொன்கொடுத்துக் கொத்தரை நட்டாராக்கியபின் தன் வேந்தனைக் கொல்வித்தான். அமீலியானஸ் இதை அறிந்து கல்லஸ் என்பவனை எதிர்த்து அவன்மகனை வென்று கொன்றான். வலேறியன் என்னும் ஒருபடைத்தலைவன் கல்லஸ் என்பவனுடைய கட்சியைச் சார்ந்து அமீலியனை எதிர்த்தான். போர்வீரர் வலேறியனையும் அவன்மகன் கல்லியானஸ் என்பவனையும் தனிக்கோலரெனத் தொழுதனர். இத்தருணத்தில் கொத்தர் ஸ்பெயின் தேசத்துட் புகுந்து சூறையாடினர். கல்லியானஸ் சர்மானியப்பெண் பிப்பாவை மணம்புரிந்தான்.

கொத்தரில் ஒருபாலார் பாஸ்பரஸ் நீரிணைவழியால் நுழைந்து கிரேக்கநாட்டிற்புகுந்து எதென்ஸ்நகரைத் தாக்கினர். அவர்கள்

நகரத்து நூல்நிலையத்திற்குத் தீயிடவெண்ணினராக, கொத்தர் தலைவன் கற்றிலனாயினும், நூல்களை எரிக்கப்படாதெனத் தடுத்தான். தனிக்கோலன் கல்லியானஸ் கொத்தரும் பார்சியரும் நெருக்கியபோதிலும், அரசியலில் மனத்தைச்செலுத்தாது, புளோற்றீனஸ் என்னும் தத்துவஞானியோடு ஞானம்பேசிக் காலத்தைக் கழித்தான். 19 தலைவர் விரோதித்தெழுந்தனராயினும், மேன் மக்கட்சபையினர் தாம் தெரிந்தெடுத்த வேந்தனை வெறுத்திலர். உரோமர் தனிக்கோல் உள்நாட்டுக் கலகங்களாலும் அயலோரின் நெருக்கடியாலும் பங்கப்பட்டது. கி. பி. 250 முதல் 268 ஈறான காலத்தில் பிளேக்குநோய் உரோமர்நாடெங்கும் பரம்பிற்று. நாளொன்றுக்கு உரோமாபுரத்திலேயே 500 சனங்கள் இறந்தனராம். பொதுமக்கள் செங்கோல் கோடிற்றெனக் கதைத்தனர். தானியூபிமாகாணங்களில் தேசாதிபதியாக அமர்ந்திருந்த ஔறியோலஸ் என்போன் கல்லியேனஸ் என்னும் வேந்தனைக் கொன்று குளோடியஸ் என்பவனுக்குத் தலைமைப்பதவியை நல்கினன். குளோடியஸ் கொத்தரை வென்றான். அவனுடைய தம்பி குவிந்திலியன் 17 நாள் அரசாண்டபின் ஔறியோலஸ் பகைத்தெழுந்தமையால், தன்பதவியைத் துறந்தான். ஔறியோலஸ் 4 வருடம் ஆண்டு சர்மானியரோடு போராடினன். கொத்தரைக் கல்லியா தேசத்தினின்றும் கலைத்தான். சனோபியாவின் இராச்சியத்தையும் அழித்தான். ஔறியோலஸ் வீரரைச் சூதாடப்படாது, குடிக்கப்படாது, சூறைகொள்ளப்படாதெனக் கற்பித்தான். அவன் கொத்தரோடு உடன்படிக்கை எழுதிக்கொண்டு 20,000 வீரருக்குத் தன்படையிற் சேவிக்க உத்தரவு அளித்தான். கொத்தர் இனத்தைச்சேர்ந்த அலிமானியர் என்னும் ஒருசாதியார் இத்தாலியா தேசத்தினுட்புகுந்து துரத்தப்பட்டனர். கி.பி. 327-ல் ஔறியோலன் உரோமாபுரத்தின் மதில்களைப் புதுப்பித்தான். பின்பு பல்மீரா நாட்டு அரசி சனபியாவோடு போர்செய்தற்குப் புறப்பட்டான். அரசி அழகிற்சிறந்தவள்; லற்றின், கிரேக்கு, சிரியா என்னும் மொழிகளைக் கற்றுணர்ந்தவள்; ஹோமர், பிளேற்றோ என்போரின் நூல்களை வாசித்தறிந்தவள். அவள் ஒடிநாதனைக் காதலித்தாள். இருவரும் வேட்டையாடுதலில் மிகப் பிரியமுள்ளவர்கள்,

வேட்டையாடும்பொழுது ஒடிநாதன் கொல்லப்பட்டான். சனபியா அராபியதேசம் முழுவதிலுஞ் செங்கோல்செலுத்தினாள். பின்னர் உரோமரை எகிப்துதேசத்தினின்றும் துரத்தினாள். 273-ஆம் ஆண்டு ஔறீயோலன் அவளைச் சிறைப்படுத்தினான். விடுதலையான பின் சனபியா இத்தாலியாதேசத்தில் வாழ்ந்தாள். அவளுடைய பெண்கள் உரோமநாட்டு மேன்மக்களை மணஞ்செய்துகொண்டனர். அளவுக்குமிஞ்சி அரசிறை பெற்ற தேசாதிபதி ஒருவனை ஔறியோலன் தண்டித்தான். அத்தேசாதிபதி ஔறியோலனைக் கொல்வித்தான். படைவீரர் அத்தேசாதிபதியை உடனே கொன்றனர். இளவயதில் இறந்தலே உரோமருடைய தனிக்கோலரின் விதிபோலும். உரோமர்தனிக்கோலர் கொடுங்கோலராயினுஞ்சரி; செங்கோலராயினுஞ்சரி; சற்குணராயினுஞ்சரி; தூர்த்தராயினுஞ் சரி; தம்காலத்திற்குமுன் யமன்கையில் அகப்பட்டனர்.

கி. பி. 275-ல் உரோமராச்சியம் அரசரின்றியிருந்தது. மேன்மக்கட்சபை ஒருவரை நியமிக்கப் படைவீரர் ஒருவரைத்தெரிந்தெடுத்தனர். ரசிற்றஸ் என்னும் சரித்திரவாசிரியன்குலத்துதித்தோனாகிய ரசிற்றஸ் என்னும் வயோதிகனுக்குப் போர்வையளித்தனர். அவன் 75 வயதினன். ஆறுமாதம் ஆண்டபின் உயிர்நீத்தான். அவனுடைய சகோதரன் புளோறியானஸ் அரியணை ஏறினான். பின்னர் புறூபஸ் என்னும் படைத்தலைவன் அரசனானான். அவன் சர்மானியரைக் கல்லியநாட்டினின்றும் ஓட்டிக் கலைத்தான்; 16,000 சர்மானியரைத் தன்படையிற்சேர்த்துப் பலவிடங்களிலும் சேவிக்கும்படி பணித்தான்; இப்பதினாறாயிரம்வீரரையும் ஒருநாட்டிற் சேவிக்கவிட்டால் பகைவராதல்கூடுமென எண்ணி, அவர்களைச் சிறுகூட்டங்களாகப் பிரித்து, எட்டுத்திக்கிற்கும் அனுப்பினான். புறூபஸ் உள்நாட்டுப்பகைவர்பலரை அடக்கி, கி. பி. 281-ஆம் ஆண்டு வெற்றிவிழாக் கொண்டாடினான். அவ்விழாவில் வாட்போர்க்காட்சி நடைபெறவில்லை. வாள்வீரர் தங்களைத் தாங்களே கோறல் பேதைமை என எண்ணித் தம் காவலரைக் கொன்று வீதிதோறும் கலகஞ்செய்து திரிந்தனர். அரசனுடைய நிலைப்படை கலகத்தை அடக்கிற்று. பகைவர் குன்றினராக, புறூபஸ் படைவீரர்களைத் திராட்சைக்கொடிநட்டுக் கமத்தொழில்செய்யும்படி

ஏவினன். படைவீரர் மறுத்துப் பகைத்தெழுந்து புரோபஸ் என்னும் வேந்தனைக் கொன்று தம் தலைவன் காரஸ் என்போனுக்குத் தனிக்கோலை அளித்தனர். காரஸ் மேன்மக்களை எள்ளளவேனும் பொருட்படுத்தினனல்லன். தான் தனிக்கோலன் என்பதை மேன்மக்களுக்கு அறிவித்தான். "என்தலை வெண்டலையாய வாறு நும் பார்சியநாடும் வெறுமையாம்படி மரங்களை வெட்டி வீழ்த்தி யழிப்பல்" எனப் பார்சியதூதரிடம் சொன்னான். கி. பி. 283-ஆம் ஆண்டு பார்சியதேசத்தில் பாசறையிட்டிருந்தான். அரசன் பாசறையில் இறந்திருந்ததை வீரர் ஒருநாட் காலை கண்டனர். படைவீரர் அவன்குமாரரை உரோமாபுரத்திற்குத் திரும்பும்படி வேண்டினர். மூத்தகுமாரன் கரீனஸ் கூத்தரோடும் பாணரோடுங்கூடிக் களித்தான்; வரைவின்மகளிர் பலரை அரசமாளிகையில் இருத்தினன்; காட்சிகண்டு இன்புறுதற்குப் பெரிய தோர் விழாநடத்தினன். அவ்விழாவில் ஆபிரிக்காக்காட்டுச் சிங்கங்களும் அராபியாவனாந்தரத்து ஒட்டகங்களும் இந்தியநாட்டு வேங்கைகளும் கொல்லப்பட்டன. இளையகுமாரன் நூமேரியனை அவன் மாமன் அரியஸ் அப்பர் என்னும் காவற்றலைவன் கொன்றான். டையக்கிளீசியன் தான் அக்கொலையிற் சேரவில்லையென விளம்பி, அப்பரைக் கொன்றான்; பின்பு கரீனஸ் என்னும் வேந்தனை வென்று அரசனானான்.

## டையக்கிளீசியன்.

டையக்கிளீசியனுடைய பெற்றோர் அடிமைகள். பார்சியப் போரில் டையக்கிளீசியன் தன் போராற்றலைக் காட்டினன். அதனால் தேசாதிபதியாக்கப்பட்டான். பின்பு இணைத்தலைமைப்பதவியை எய்தினன். முடிவில் தனித்தலைமைப்பதவியைப் பெற்றான். டையக்கிளீசியன் தன்கருமமே கண்ணாயிருந்தனன். பாத்திரம் அறிந்து ஈகைசெய்தான். தன்னை எதிர்த்தோரைத் தண்டியாமல் தன்னைப் பகைத்தோரை நட்டாராக்கி அரசியல் நடாத்தினன். மாக்சிமியன் என்போனைத் தன்னுடன் தலைமைவகிக்கும்படி தெரிந்தெடுத்தான். தான் சேயஸ் என்னும் தெய்வத்தின் அவதாரம் எனவும், துணைவன் மாக்சிமியன் கர்க்கியூலஸ் என்னும் தெய்வத்தின் அவதாரம் எனவும் பகர்ந்தான். கலேறியஸ் கன்ஸ்ராந்தியஸ்

என்னும் இரு இளைஞருக்குக் கைசர்ப்பட்டத்தை நல்கி, கல்லியர் சர்மானியா என்னும் எல்லைப்புறத்தேசங்களைக் காக்கும்படி ஏவினான். கலேறியனைத் தன்மனைவியைத் துறக்கும்படி ஏவித் தன் மகளை அவனுக்கு அளித்தான். கன்ஸ்ராந்தியஸ் மாக்சிமியனுடைய மகளை மணந்தான். தனிக்கோலன் டையக்கிளீசியன் சின்னாசியா எகிப்து என்னும் நாடுகளைக் காத்தான். மாக்சிமியன் இட்டாலி ஆபிரிக்கா என்னும் நாடுகளைக் காத்தான். கரோசியஸ் என்னும் கப்பற்படைத்தலைவன் சர்மானியரைப் பிரித்தானியாதேசத்தை அணுகவிடாது துரத்தினான். அவன் சர்மானியரிடம் சூறையாடிக்கொண்டவற்றைத் தன்பொருட்டுச் செலவுசெய்தான். மாக்சிமியன் அவனைத் தண்டிக்க எண்ணினன். கரோசியஸ் கி. பி. 287-ஆம் ஆண்டு பிரித்தானியாவில் சுவாதீனமாயிருந்தான். அத்தேசத்தை ஏழுவருடம் ஆண்டு இறைபெற்றான். மாக்சிமியனும் டையக்கிளீசியனும் அவனைத் துணைவன் என ஒப்புக்கொண்டனர். இதற்கிடையில் அலெக்ரஸ் என்போன் கரோசியனைக் கொன்றான். கி. பி. 296-ல் கன்ஸ்ராந்தியஸ் அலெக்ரஸ் என்போனை வென்றான். இது நிற்க. கலேறியஸ் கொத்தரை எல்லைப்புறத்தினின்றும் துரத்தினான். மாக்சிமியன் மேல் ஆபிரிக்கரை அடக்கினான். டையக்கிளீசியன் பார்சியரோடு போர்புரிந்தான். பார்சியர் தம்முள் முரண்பட்டனராகித் தோல்வியடைந்தனர். கி. பி. 296-ல் நார்சிஸ் என்னும் பார்சிய வேந்தன் கலேறியஸ் என்னும் தலைவனை வென்றான். டையக்கிளீசியன் பார்சியரோடு சமாதானஞ்செய்துகொண்டு உரோமாபுரந்திரும்பி வெற்றிவிழாக்கொண்டாடினான். டையக்கிளீசியன் 21 ஆண்டு செங்கோல் ஓச்சியபின் அரசைத் துறந்து தன் பிறப்பிடமாகிய இலிறியாதேசத்தில் இளைப்பாறினன்.

## 13-ஆம் அதிகாரம் உரோமராச்சியத்தின் இறுதிக்காலம்.

### கன்ஸ்ராந்தையின்.

கி. பி. 305-ஆம் ஆண்டில் மாக்சிமியன் தன் அரசைத் துறந்து தன் ஊரில் இளைப்பாறினன். கலேறியஸ், தாசன் என்னும் தன்மருகனுக்கும் சவரஸ் என்னும் ஒரு ஏவலாளனுக்கும் கைசர்ப்பட்டத்தை நல்கினான். மச்சந்தியஸ் என்போன் ஆபிரிக்கநாட்டில் பகைப்

படை திரட்டினன். கலேறியனுக்கு எதிராகக் கஸ்ஸ்ராந்தையினும் கல்லியநாட்டிற் படைசேர்த்தான். கன்ஸ்ராந்தையின் கி.பி.274-ஆம் ஆண்டில் டேசியமாகாணத்திற் பிறந்தான். 306-ல் கல்லியா தேசத்திற்குத் தனித்தலைவனானன். பிறநாட்டிற் பிறந்தோர் அரசு செலுத்தியமையால் தம் உரிமைகள் குன்றின என உரோமர் எண்ணினர். தாம் இறை இறுக்கவும் நேரிடுமென ஐயுற்றனர். உரோமர் தம்நாட்டிற்பிறந்த மச்சந்தியனுக்குத் தலைமைப்பதவியை அளித்தனர். இச்செய்தியைக் கலேறியஸ் தலைவனும் சவரஸ் தலைவனும் கேள்விப்பட்டு உரோமாபுரத்திற்கு விரைந்தனர். கலேறியஸ் தன் நண்பன் லிசினியஸ் என்போனைத் துணைவனாக்கிச் சவரஸ் என்பவனை எதிர்த்தான். மச்சந்தியஸ் தன் தந்தை மாக்சிமியனோடு கலகப்பட்டான். கலேறியன் மச்சந்தியனை வென்றானாக, மாக்சிமியன் நாணயசாலையைத் தன்வசமாக்கினன். கன்ஸ்ராந்தையின் மாக்சிமியனோடு பொருதுவென்றானாக, மாக்சிமியன் தற்கொலை புரிந்துகொண்டான். கலேறியஸ் சிற்றின்பங்களை நுகர்ந்து நோய் வாய்ப்பட்டு உடம்புவீங்கி இறந்தான். கன்ஸ்ராந்தையின் கல்லியா தேசத்திற் செங்கோல்செலுத்தினன். மச்சந்தியஸ் உரோமாபுரத்திற் கொடுங்கோலோச்சினன். அவனுடைய காற்படை 170,000; பரிப்படை 18,000 கன்ஸ்ராந்தையின் 8000 குதிரைகளோடும் 90,000 காற்படையோடும் அல்புமலையைக் கடக்க, மச்சந்தியனுடையபடை கலைந்தது. கன்ஸ்ராந்தையின் உரோமாபுரத்தில் அரசியல்செலுத்தத்தொடங்கினன். அவன் காவற்படையைக் குலைத்தான். மேன்மக்கட்சபையின் அதிகாரம் உடனே குன்றிற்று. கன்ஸ்ராந்தையின் லிசினியஸ் என்பவனுக்குத் தன்தங்கை கன்ஸ்ராந்தியாவை மணம்பேசினன். இக்கருணத்தில் எகிப்தில் இருந்த தேசாதிபதி மச்சிமின் என்போன் தனித்தலைமைப்பதவியை விழைந்தான். லிசினியஸ் 30,000 வீரரோடு சென்று அவனை அடக்கினன். பின்பு லிசினியஸ் நன்றிமறந்து தன் நண்பன் கலேறியனுடைய மனைவிமக்களைக் கொன்றான். கி.பி.314-ல் கன்ஸ்ராந்தியின் மேல்நாடுகளை ஆண்டான். கீழ்நாடுகளை லிசினியஸ் ஆண்டான்.

கன்ஸ்ராந்தையின் லிசினியனோடு போர்தொடர்ந்தான். இங்ஙனம் ஆங்காங்கெழுந்த தலைவர்பலரை யடக்கி உரோமநாடுகள் யாவற்றிற்கும் கன்ஸ்ராந்தையின் தனித்தலைவனானான்.

## கிறிஸ்துமதவரலாறு.

கிறிஸ்துமதம் பரம்பியதற்கு முக்கியகாரணம் கிறிஸ்தவரின் சமயாபிமானமே. பண்டைக்காலத்துக் கிறிஸ்தவர்கள் தங்கள் சமயத்திற்காகத் தங்கள் உயிரைத் தியாகஞ்செய்தனர். முதல் நூற்றாண்டில் யூதர்மாத்திரமே கிறிஸ்துமதத்தை வழிபடுதற்கு உரிமையுடையவராயிருந்தனர். பின்னர் அஞ்ஞானிகள் எனப்படும் பிறமதத்தோரும் கிறிஸ்தவராயினர். கிறிஸ்தவசமயகுரவர்செய்த அற்புதங்களை நம்பிய பலர் கிறிஸ்தவராயினர். மேலும், குருமாரின் சங்கம் குருமாருடைய ஒழுக்கத்தைக் காத்தது. ஆதலின் குருமார் தங்கள் மதத்தைப் பரப்புதற்கு நனிமுயன்றனர். உரோமர்தனிக்கோலர் கிறிஸ்துமதத்தைத் தழுவியதும் கிறிஸ்துமதம் பரம்புதற்கு ஒரு சிறந்த காரணமாகும். யூதருடைய கிரியைகளைச் சகலரும் வெறுத்தனர். யூதர் பன்றியிறைச்சி உண்ணார். கைசர்கள் யூதரை முரடர் என எண்ணினர். எருசலம் நகரிலுள்ள யூதர் கோயிலைக் கைசர்கள் இடித்தனராக, யூதர்சமயம் ஒடுங்கிக் குன்றியது. இத்தருணத்தில் கிறிஸ்தவர் யூதர்கிரியைகள் அவசியமற்றவை எனப் போதித்துக் கிறிஸ்தவராதற்கு நுனித்தோலைக் கத்தரிக்க வேண்டியதில்லையெனத் தீர்மானித்தனர். கிறிஸ்தவசமயம் பெருகிற்று. அலெக்சாந்திரியாநகர், கொறிந்துநகர், நிக்கமீடியாநகர் உரோமாபுரம் முதலிய இடங்களில் வெவ்வேறுகொள்கையுடைய கிறிஸ்துசமயச்சங்கங்கள் தோன்றின. யூதகிறிஸ்தவர்கள் தம் கொள்கைகளை இச்சங்கங்கள் பாராட்டாமையையுணர்ந்து தாம் ஒரு தனிக்குழுவாக இருந்தனர். கிறிஸ்தவர்கள் விக்கிரகவாராதனையை வெறுத்தனர்; நாடகக்காட்சியைக் கண்டித்தனர்; கிரேக்க தேவதைகளைப் பசாசுகள் எனப் பழித்தனர்; ஹோமர் வேசிலியஸ் என்னும் புலவர்களைப் பசாசுகளின் துணைவரெனக் கூறினர். கிறிஸ்தவர் மறுமையுண்டென நம்பினர். யஸ்தின்மாட்டர் என்னும் கிறிஸ்தவகுருவும் ஐறேனியஸ் என்னும் கிறிஸ்தவகுருவும் கிறிஸ்து

மறுபடியும் அவதரிப்பர் என வற்புறுத்தினர். கிறிஸ்தவர் இரு பெண்டீரை விவாகஞ்செய்தலைக் கண்டித்தனர். தேசாபிமானத்தி லும் சமயாபிமானத்தையே போற்றினர். கிறிஸ்தவருடைய ஒழுக் கங்களைக் குருமார் கவனித்தனர். கிறிஸ்தவர்கோயில்களுக்கு நிலமும் பணமும் நன்கொடையாக அளிக்கப்பட்டன. கிறிஸ்தவ ருடையவரலாறுகள் கிரேக்கமொழியில் எழுதப்பெற்று, லத்தின் மொழியில் மொழிபெயர்க்கப்பட்டன. தன்காலத்தில் 50000 கிறிஸ்தவர் இருந்தார் என ஆசிரியர் ரசிற்றஸ் எழுதினர். முதன் முதல் கிறிஸ்துசமயம் ஆபிரிக்கநாடுகளிற் பரம்பிற்று. கிளமன்ஸ், ரேட்டுலியன், ஓரிசின்: என்னும் கிறிஸ்தவ குருக்கள் யவனருடைய தத்துவநூல்களைக்கற்றனர். பிளினி, ரசிற்றஸ், புளூற்ருக்கஸ், கலன், எப்பிக்ரேற்றஸ்: என்னும் அறிஞர்கள் கிறிஸ்துசமயக்கொள்கைகள் சிறப்பற்றவை எனக் கிளந்தனர். அந்தோநயினர், ஔறிலியர் என் னும் தலைவர்கள் கிறிஸ்துசமயத்திற்கு ஆதரவளிக்கவில்லை. உரோம தேசாதிபதிகள் கிறிஸ்துமதத்தை மதித்திலர். கிறிஸ்தவர்கள்மேற் றொடரப்படும் வழக்குகளை ஏற்றிலர். கிறிஸ்தவரும் யூதரும் சொற்பிரயோகங்களைப்பற்றி வீண்வர்தாடுகின்றனரென நினைத்த னர். தலைவன் நீரோ கிறிஸ்தவரைத் துன்புறுத்தினன். உரோமா புரம் தீப்பற்றியதாக, சனங்கள் நீரோ மீது ஏற்றிய குற்றத்தை அவன் கிறிஸ்தவர்மீது ஏற்றினன். நீரோவினுடைய காமக்கிழத்தி பப்பியாசபினு என்பவள் யூதசாதியினளாதலின் நீரோ யூதரைக் காத்தான். இளைய பிளினி கிறிஸ்தவரைத் தண்டித்தற்குப் பிர மாணங்கள் ஏற்படாமையால் தான் தேசாதிபதியாக இருந்துழி அவர்களைத் தண்டிக்கவில்லையென எழுதியிருக்கிறார். உரோமர் கீழ்மக்கள், கிறிஸ்தவர்களை வெறுத்து வழக்குத் தொடர்ந்தனர். உரோமர்தலைவர்கள், கீழ்மக்களின்சான்று, நீதிமன்றத்திற்செல்லா தென விடுத்தனர். டேசியஸ், மச்சிமின் என்னும் தனிக்கோலர்கள் தம்மைத் தேவரெனமதித்துப் பலியிடுகின்றிலர் எனக் கிறிஸ்த வரைத் தண்டித்தனர். ஓரிசின் என்னும் குரு தனிக்கோலன் பிலிப்பின் ஆதரவைப் பெற்றான். டையக்கிளீசியன் கிறிஸ்தவரை

வருத்தினனெனக் குருமார் கூறினர். ஆனால் அவன் 9 குருமாரைமாத்திரம் கொன்றான் எனத் தெரிகின்றது. இனி கன்ஸ்ராந்தையின் கிறிஸ்துசமயத்தை எங்ஙனம் வளர்த்தானென்பதை இயம்புவாம்.

கி. பி. 324-ஆம் ஆண்டு லிசினியஸ் என்னும் தலைவனைவென்றபின், கன்ஸ்ராந்தையின் கன்ஸ்ராந்திரப்பிள் என்னும் பைசந்தியத்தைத் தலைநகராக்கினான். கன்ஸ்ராந்தையின் உருவில் உயர்ந்தோனெனவும் திருவிற்சிறந்தோனெனவும் ஊக்கமுடையவன் எனவும் கத்தோலிக் கிறிஸ்தவரால் பாராட்டப்பட்டான். அவன் அரசர்க்குரிய அணிகலன்களையணிதலில் விருப்பமுடையோன். அவனுடைய முதன்மனைவி மினேர்வினா கிறிஸ்பஸ் என்னும் ஒருமகனைப் பெற்றாள். இரண்டாம் மனைவியாகிய பேஸ்தா என்பவள் மாக்சிமியனுடைய மகள். அவள் மூன்று ஆண்குழந்தைகளையும் மூன்று பெண்குழந்தைகளையும் பயந்தாள். அம்மூன்று ஆண்குழவிகளின் பெயர் கன்ஸ்ராந்தையின், கன்ஸ்ராந்தியஸ், கன்ஸ்ரான்ஸ் என்பன. வேந்தனுடைய சகோதரர் மேன்மக்கட்குடும்பத்தில் மணம்புரிந்தனர். யூலியஸ் கன்ஸ்ராந்தையின் என்பவன் கல்லஸ், யூலியன் என இருகுமாரரைப் பெற்றான். வேந்தனுடைய மகன் கிறிஸ்பஸ் தன் தந்தைக்குத் துணைபுரிந்து தலைவன் லிசினியனைக் கடற்போரில் வென்றான். வேந்தன் தன் முதல்மனைவி பயந்த கிறிஸ்பஸ் என்போனை வீட்டில்வைத்து இரண்டாம்மனைவியின் குமாரரைக் கைசராக்கி அரசுரிமையை ஈந்தான். பெஸ்தாவின் தூண்டுதலால் கிறிஸ்பஸ் கொல்லப்பட்டான். அவள் கிறிஸ்பஸ் தன்னைக் காமுற்றான் என வழக்குரைத்தாள். பதிலுக்குப்பதிலாக, கிறிஸ்பனுடைய பாட்டி எலீனா என்பாள் பெஸ்தா ஒரு அடிமையோடுகூடினாள் எனச் சான்றுசொல்லிப் பெஸ்தாவை வெந்நீரில் அமிழ்த்திக் கொன்றாள். கன்ஸ்ராந்தையின் தன் மக்கள் மூவரையும் கிறிஸ்தவரைக் கொண்டு கற்பித்தான்.

சாமீசியர், விஸ்தியூலா வல்கா என்னும் நதிகளின் இடைப்பட்ட முல்லைநிலங்களில் தம் பட்டிகளை மேய்த்தனர். அவருடைய பண்டிகளை எருதுகள் இழுத்தன. அவர்கள் குதிரையேற்றம்

பயின்றனர். அவர்களுடைய வில்வீரர் நஞ்சுபூசிய அம்புகளை உபயோகித்தனர். மீன்முள்ளே அவர்களின் ஈட்டியாகும். சாமீசிய வீரரின்தோற்றம் பயங்கரமானது; அவ்வீரருடைய தாடி அச்சம் விளைக்குந்தன்மையது. சாமீசியர் தம்மைக் கொத்தர் நெருக்கினரெனக்கூறி உரோமரிடம் துணைவேண்டினர். கி. பி. 331-ல் அலாறிக்கு கொத்தருக்கு வேந்தனானன். கொத்தரைக் கன்ஸ்ராந்தையின் தானியூபிநதியளவும் கலைத்தானாக, 300,000 சாமீசியர் உரோமநாடுகளிற் குடியேறினர். 30 வருடம் ஆண்டபின், வேந்தன் கன்ஸ்ராந்தையின் இறந்தான். அவன் இறந்தபின்னும் அரசனுக்குரிய மரியாதை அவன்கூட்டுக்கு அளிக்கப்பட்டது. அவன்மகன் கன்ஸ்ராந்தையின் II தலைநகரில் ஆண்டான். கன்ஸ்ராந்தியஸ் கீழைத்தேசங்களில் அரசுபுரிந்தான், கன்ஸ்ரான்ஸ் உரோமாபுரத்தை ஆண்டான். கன்ஸ்ராந்தியஸ் பார்சியரோடு போர்புரிந்து பார்சியவேந்தன் சப்போர் என்பவனால் கி. பி. 337- தொடக்கம் 360 ஈறாக உள்ள காலத்தில் ஒன்பதுமுறை வெல்லப்பட்டான். கன்ஸ்ரான்ஸ் கன்ஸ்ராந்தையினைக் கொன்றான். கொன்றானை மக்கந்தியஸ் என்னும் வீரன் கொன்றான். கி. பி. 351-ல் கன்ஸ்ராந்தியஸ் மக்கந்தியனைவென்று தனிக்கோலோச்சினான். அவன் யூலியனை அலிமானியரை அடக்கும்படி ஏவினான். தனக்கடாத தொழிலைச் செய்யும்படி அரசன் ஏவினான் எனச் சிறுவன் பிரலாபித்தான்; "பிளேற்றோவே நான் என்செய்வேன்" என அவன் அழுதான். கி. பி. 356-ல் யூலியன் றைபின்நதியைக் கடந்து 20,000 அலிமாணியரைச் சிறையாக்கித் திரும்பினான்.

முதலாவது கன்ஸ்ராந்தையின் கி. பி. 306-ல் கிறிஸ்தவனானன்: என ஒரு ஆசிரியர் செப்புகிறார். எசூபியஸ் என்னும் வேறோர் கத்தோலிக்கர் "கி. பி. 312-ல் வேந்தன் ஓர் அற்புதங்கண்டு கிறிஸ்துமதத்தைத் தழுவினான்" என உரைக்கின்றனர். கன்ஸ்ராந்தையின் கி. பி. 321-ல் ஞாயிற்றுக்கிழமையைத் தெய்வவழிபாட்டிற்குரியநாளாகக் கவனிக்கும்படி தன் குடிகளுக்குக் கட்டளையிட்டான். கிறிஸ்தவரிடம் பறித்தநிலங்களைத் திருப்பியளித்தான். அவனைச் சேவித்த அந்நியர் கிறிஸ்தவமதத்தைத் தழுவினர். அரசன் சிலுவைச்சின்னத்தைத் தன் கொடியில் எழுதுவித்தான்.

கத்தோலிக்ககுருமாரை அமைச்சராக்கி, அரசியலை நடாத்தவைத்தான். அவனுடைய குமாரர் உரோமருடைய கோயில்களை இடித்துக் கிறிஸ்துமதத்தைப் பரப்பினர்.

## யூலியன்.

கல்லியாதேசத்தில் யூலியன் படைவீரரால் பாராட்டப்படுகிறானெனக் கன்ஸ்ராந்தியஸ் கேள்வியுற்றான். யூலியனைப் புலம்பெயர்ந்து பார்சியரோடு போர்புரியும்படி ஏவினன். யூலியனைச் சேவித்த சர்மானியர் பிறதேசம் செல்ல விரும்பவில்லை. யூலியன் ஒன்றும் செய்ய இயலாது கலங்கித் தன் பதவியைத் துறக்கநினைத்தான். பின்னர்த் தன் படைவீரரை முகமன்கூறித் தன்வசப்படுத்திப் பார்சியப்போர்நடாத்துதற்குப் புறப்பட்டான். அன்றிரவு படைவீரர் யூலியனைத் தனித்தலைவனெனத் தொழுதனர். யூலியன் வீரரைக் கெஞ்சினான்; படைமீது சீறினான்; ஒன்றும் செய்யமுடியாமல் தலைமைப்பதவியை ஏற்றான். கன்ஸ்ராந்தியஸ் யூலியனுடைய நாட்டைப் பிடிக்கும்படி கொத்தரை ஏவினான். உரோமர் மேன்மக்கள் யூலியனைத் தலைவனென வாழ்த்தினர். யூலியன் சிற்றின்பங்களை வெறுத்தோன், ஆதலின் உண்டாட்டுச்செலவைக் குறைத்தான்; நாவிதர் பலர் அவசியமில்லையெனக்கூறித் தன் முன்னோனுக்குப் பணிசெய்த 20 நாவிதரை விலக்கினான். யூலியன் நிலத்திலே படுத்து உறங்கினான். யூலியன் பலபடப் புனைந்துபேசும் வல்லமையுடையவன்; உரோமதேவதைகளைப் பத்தியோடு வணங்கினான், யவனநூல்களுக்கு உரைகளெழுதினான்; யவனர் கோயில்களில் அந்தரங்க கிரியைகளைச் செய்யும் உரிமைபெற்றான். அக்கிரியைகளைச்செய்தற்குப் பிறமதத்தோர்க்கு உரிமையில்லையென யவனர் வற்புறுத்தினர். அந்தரங்கக் கிரியைகள் குகைகளில் வாத்திய ஆரவாரத்துடன் செய்யப்படும். அத்தருணத்தில் கடவுள் ஒரு சோதியாகப் பிரசன்னமாவர். யூலியன் தேவர் பலருடன் அளவளாவிப் பேசினனாகவும் அவர்களின் குரல்வித்தியாசத்தையும் அறிந்தோனாகவும் அறியக்கிடக்கின்றது. யூலியன் பிறமதத்தோரைத் துன்புறுத்தவில்லை. அவன் ஆதித்தபகவானுக்குத் தீமூட்டிப் பலியளித்தான். அவன், எருசலெம் கோயிலைப் புதுப்பிக்க

எண்ணினாக, யூதர் பொருளீந்தனர். கோயில் அடித்தளத்தி லிருந்து தீக்கனன்றதாம். ஆகலின்கோயில் கட்டப்படவில்லையெனக் கிறிஸ்தவ ஆசிரியர் எழுதினர். ஒருநாள் யூலியன் இசைக்கடவுள் அப்போலோத்தேவரின் விழாவைக் கொண்டாடினாக, கிறிஸ்தவர் பபிலாஸ்குருவின் விழாவைக் கொண்டாடினர். அன்றிரவு அப்போ லோவின் கோயில் எரிந்தது. உரோமஉத்தியோகஸ்தர் கிறிஸ்தவர் களே தீயிட்டனரென ஐயுற்று அவர்களைத் துன்புறுத்தினார்கள்.

யூலியன் அவர்களைத் துன்புறுத்தவேண்டாமென்று தடுத் தனன். அலெச்சாந்திரியாநகரத்தின் குரு யோர்ச்சு என்போன் பல கோயில்களை இடித்தான். அவனைச் சனங்கள் கொன்றார்கள். இந்த யோர்ச்சுத்தான் ஆங்கிலேயருடைய இஷ்டசமயகுரவனாவன். அதனாசியஸ் குருப்பட்டம் பெற்றான். அவனைச் சற்சமயவிரோதி யென யூலியன் துரத்தினான். அவன் வனாந்தரம்சென்று வாழ்ந் தான். ரோமியூலஸ் தேவர்க்கு விருந்தளித்ததாகவும், கொடுங் கோலர் நரகத்திலிடப்பட்டதாகவும், யூலியஸ் கைசர் அகஸ்ரஸ், திராசன் மாக்கஸ் அந்தோநயினன் முதலியோர்க்கு முதற்கடவுள் சேயஸ் கண்ணியளித்ததாகவும் உரோமவீரரோடு அலெச்சாந்தர் வீரம்பேசியதாகவும் மாக்கஸ் ஒளரீலியனுடைய மௌனத்தைத் தேவர்கள் வியந்ததாகவும் ஓர் இனிய கட்டுரையை யூலியன் வரைந் தான். இந்தியா இலங்கை முதலிய தூரதேசத்துத் தூதர்கள் யூலியனுடைய செங்கோலைப் புகழ்ந்து பாராட்டினர். சிரியாதேசத் தில் வற்கடம் நிகழ்ந்ததைக் கேள்வியுற்றுச் செலவைச்சுருக்கும் படி யூலியன் குடிகளை ஏவினன். ஆடம்பரவாழ்க்கையை விரும்பும் கீழைத்தேசத்தவர்களுக்கு அப் புத்திமதி கசப்பாயிருந்தது. அவர் கள் தலைவனை இழித்துப்பாடினர். அவனும் அவர்களை இழித்து வசைப்பாட்டுக்கள் பாடினான். யூலியன் பார்சியதேசத்தையணுகி ஆங்குள்ள சந்திரன்கோயிலில் வணங்கினன். பின்னர் 65,000 வீரரொடு அசிரியநாடுபுக்கு வெற்றிபெற்றான். ஒவ்வொரு வீர னுக்கும் 130 வெண்பொற்காசு கொடுத்தான். அசிரியர் ஆற்று வெள்ளத்தைத் திறந்துவிட்டாராக, உரோமவீரர் அலைந்தனர். யூலியன் பார்சியநாடு திரும்பிப் பார்சியரொடு பொருதான். அவன் இந்தியாவையும் பார்க்கவிரும்பினானும். படைவீரர் அங்கு செல்ல

விரும்பவில்லை. போரில் காயப்பட்டுத் தன் 32-ஆம் வயதில் யூலியன் தன்யாக்கையைவிட்டனன். அவன் கி. பி. 364-ல் இறந்தான். யூலியன் இளவயதில் இறந்திடாதிருப்பின் கிறிஸ்துசமயம் அழிந்திருக்கும். யோவியன் என்னும் ஒருவீட்டுப் பணிவிடைக்காரன் தலைவனாகத் தெரிந்தெடுக்கப்பட்டான். பார்சியர் உரோமராட்சியிலிருந்த 5 நாடுகளைப் பிடித்தனர். உரோமருடைய படைவீரர் யோவியன் இறந்திருப்பதை ஒருநாட் காலை கண்டனர். வலந்தினியன் மேல்பாகத்து இராச்சியத்துக்கும், அவன் தம்பி வலன்ஸ் கீழ்பாகத்திற்கும் தலைவராயினர். இருவரும் ஒற்றர் மூலம் தம் பகைவரை ஒற்றியறிந்து கொன்றனர். இக்காலத்தில் அலிமானியர் கல்லியாநாட்டினின்று துரத்தப்பட்டனர்.

ஆங்கில சாக்சன் என்னும் சர்மானியசாதியார் பிரித்தானியா தேசத்தில் இறங்கினர். அவர்களை தியடோசியஸ் துறத்தமுயன்றான். பார்சியவேந்தன் சப்போர் ஆர்மீனியநாட்டைத் தனது ஆட்சிக்குட்படுத்தினன், கொத்தரை வலன்ஸ் துறத்தியடித்தான். வலந்தினியன் சவராவை மணந்து கிருசியானஸ் என்னும் மகனைப் பெற்றான். சில ஆண்டுகளுக்குப்பின் யஸ்தீனாவை மணந்து ஒரு குழவியைப் பெற்றான். கி. பி. 365-ம் ஆண்டு மத்தியதரைக்கடலில் பூகம்பம் நிகழ்ந்தது. கடல் நிலமாயிற்று. மீன்கள் காய்ந்துவறண்டு தீநாற்றம் வீசிற்று. பெருந்திரையொன்றெழுந்து கிரேக்கு எகிப்து என்னும் நாடுகளை அள்ளிற்று. அலெச்சாந்திரியாநாட்டில் 50,000 சனங்கள் இறந்தனரென்ப.

கி. பி. 376-ல் ஹூணர் படையெடுத்து உரோமரைத் தாக்கினர். ஹூணர் தாட்டர் (Tartars) சாதியைச்சேர்ந்தவர். மாடுமேய்த்தலே அவர்தொழில். அவருடைய உணவு பாலும் மாமிசமும். ஹூணர் குதிரைப்பாலிலிருந்து ஒருவகை மதுவை வடித்தனர். அவர்கள் கூடாரங்களில் வசித்தனர். கோடைகாலத்தில் வடநாடுகளிலும் மாரிகாலத்தில் தென்னாடுகளிலும் மாடுமேய்த்தனர். ஹூணர் குதிரையேற்றமும் வில்வித்தையும் கற்று வல்லோராயினர். ஹூணர்வேந்தன் பத்தில் ஒருகடமை வாங்குதல் மரபு. வேந்தன் போர்க்காலத்தில் படைத்தலைமை வகிப்பன். பெண்டுகள் வீட்டுப்

பணிசெய்தனர். ஹூணர் சீனதேசந்தொட்டுப் பிரித்தானியத் தீவுவரையும் பரம்பினர். சிறந்த சீனப்பெண்களை இக்கானவர் தழுவினர். சீனநாட்டுக் கோமகளொருத்தி ஹூணர்தலைவனுக்கு அளிக்கப்பட்டாள். அவள் தான் பச்சையிறைச்சி உண்ணநேரிட்டதோ எனவும், கடவுள் மோர்குடிக்க விதித்தானோ எனவும், தான் ஒரு சிறுகுருவியின்கூடுபுகுந்து சீனதேசத்திற்குப் பறத்தலாகாதோவெனவும் புலம்பினள். கி. பி. 375-ல் கொத்தர்வேந்தன் கர்மானிக்கு என்பவன் தன்சாதியாரை ஹூணருடைய கொடுமையிலிருந்து காக்கும்படி உரோமரை வேண்டினன். கொத்தர் சிலர் உரோமநாடுகளில் குடியேறினர். சிலர் உரோமர்வேந்தருடன் பொருதனர். வலன்ஸ் இறக்க, கிருசியானஸ், தியடோசியனைக் கீழைத் தேசங்களுக்குத் தலைவனாக்கினன். கிருசியன் வேட்டையாடிக் களித்தான். மச்சிமஸ்என்போன் கிருசியனை கி.பி.383-ல் கொன்றான். தியடோசியஸ் மச்சிமஸ் என்போனைக் கொன்றான். கி. பி. 390-ல் இலிறியாதேசத்தில் ஒரு கலகம் நிகழ்ந்தது. பதறிக் என்னும் கானவன் ஒருவன் படைத்தலைவனாயிருந்தான். அவனுடைய அடிமைகளுள் ஒரு சிறுவனிருந்தான். அச்சிறுவனைத் தேர்கடாவுவோனொருவன் காமுற்றானாகத் தலைவன் பதறிக்கு என்பவன் அவனைச் சிறையிட்டான். அக் காமுகன் தேர்கடாவுதலில் சிறந்தோனாகலின் அக்காலத்துக் கீழ்மக்கள் அவனை மெச்சிப் பதறிக்கென்னும் தலைவனைக் கொன்றனர். வேந்தன் தியடோசியஸ் அவ்வூர்ச் சனங்களைக் கொல்லும்படி கட்டளையிட்டான்.

[தொடரும்]

# தனித்தமிழ்ப்பரீக்ஷைத்தேர்ச்சிக்குறிப்பு.

மதுரைத்தமிழ்ச்சங்கத்தார் பிரமாதிஞு பங்குனிமீ 22, 23, 24 (1940-ம்ஞு எப்ரல்மீ 4, 5, 6)-ஆம் தேதிகளில் நடத்திய தனித்தமிழ்ப்பரீக்ஷைகளில் தேறி யோக்கியதாபத்திரம்பெறும் மாணாக்கர்களின் அபிதானபத்திரம்.

## பண்டிதபரீக்ஷை.

2-வது வகுப்பு.

| தொடர்ச்சி நெ. | ரிஜிஸ்டர் நெ. | |
|---|---|---|
| 1 | 13 | வ. நடராசா, மயிலிட்டி தெற்கு, தெல்லிப்பழை, Ceylon. |
| 2 | 11 | அ. சண்முகநாதன், ஆசிரியர், கந்தர்மடம், யாழ்ப்பாணம். |
| 3 | 1 | இ. கிருஷ்ணராமாநுஜன், மதுரைத்தமிழ்ச்சங்கக்கலாசாலை, மதுரை. |
| 4 | 14 | S. நடராசா, ஸ்ரீராமகிருஷ்ண சைவ வித்தியாசாலை, கொக்குவில் கிழக்கு, யாழ்ப்பாணம். |

## பாலபண்டிதபரீக்ஷை.

2-வது வகுப்பு.

| | | |
|---|---|---|
| 1 | 26 | N. லெட்சுமணன், மதுரைத்தமிழ்ச்சங்கக்கலாசாலை, மதுரை |
| 2 | 31 | R. கந்தசாமி, ஆசிரியர், துன்னாலை வடக்கு, பருத்தித்துறை, Ceylon. |
| 3 | 28 | S. இராமலிங்கம், C/o அரு. ப. அரு. முருகப்பசெட்டியார் அவர்கள், நடனவிலாசம், பள்ளத்தூர். |

## பிரவேசபரீக்ஷை.

2-வது வகுப்பு.

| | | |
|---|---|---|
| 1 | 33 | ஞா. விசுவாசம், மதுரைத்தமிழ்ச்சங்கக்கலாசாலை, மதுரை. |
| 2 | 34 | S. மகாதேவன், ஷை ஷை |

மதுரைத்தமிழ்ச்சங்கம்,
5—7—40.

*R. Shanmuga Rajeswaran,*
அக்கிராசனாதிபதி.

ஸ்ரீ:

# மதிப்புரை.

சூரனும் வேலனும்:—இது, கந்தபுராணத்துள் விரித்துப் பேசப்பட்ட முருகவேள் சரிதத்தை யாவரும்படித்துப் பயன் கொள்ளுமாறு, கால்நடை வைத்தியஇலாகாவில் ஜில்லாவின் தலைமையதிகாரியாய்விளங்கும் திருவாளர் P. K. தெய்வநாயகம் பிள்ளையவர்களால் இனிய தமிழ்நடையாகச் சுருக்கியெழுதப் பட்டது; தனித்தனித் தலைப்பிற் குறித்த பொருள்களைச் சிறுசிறு தொடர்களால் விரிப்பது; இடையிடையே சந்தருப்பத்துக்கேற்ற கந்தபுராணச்செய்யுள்களையும்கொண்டது; பாராயணஞ்செய்பவர்க்கும் பாட்டிடையிட்ட உரைநடையெழுதப்பயிலும் மாணவர்க்கும் மிகவும் உபயோகப்படத்தக்கது. இதன்விலை அணா 10. வேண்டுவோர் திருநெல்வேலித் தென்னிந்திய சைவசித்தாந்த நூற் பதிப்புக்கழகத்திற் பெறலாம்.

---

விக்கிரம வருஷ திருக்கணித பஞ்சாங்கம்:— இது, சென்னை: திருவல்லிக்கேணி ஜ்யோதிர்பூஷணம் ஸ்ரீ T. S. விசுவநாதசிரௌதிகள் B.A. அவர்கள் பார்வையில் அவர் மாணாக்கர் யாழ்ப்பாணம் மட்டுவில் ஸ்ரீ சி. சுப்பிரமணிய ஐயரவர்களால் வழக்கப்படி கணிக்கப் பட்டது; ஸ்ரீ. ஷே. கார்த்திகேய ஐயரவர்களால் 53-ஆம் வருட ப்ரசுரமாக வெளியிடப்பட்டது; திதிவாரநக்ஷத்ரயோககரணங்களையும் முஹூர்த்தங்களையும் விரதநாள்களையும் தேவாலய உற்சவாதிகளையும் பிறவற்றையும் தெளிய விளக்குவது; வைதிகர்க்கேயன்றி மற்றையோர்க்கும் பயன்படுவது. அரிதின் முயன்று தெரிய வேண்டிய பலவிஷயங்கள் சோதிடப்பயிற்சியில்லாதாரும் அறிந்து கொள்ளும்படி இதில் பலதலைப்புக்களில் இனிது விளக்கப்பட்டுள்ளன. இதன் விலை அணா 4. வேண்டுவோர் 'ஸ்ரீ. சி. சுப்பிரமணிய ஐயரவர்கள், ஜ்யோதிஷ ரத்நாகர நிலையம், மட்டுவில், சாவகச்சேரி, இலங்கை' என்ற விலாசத்திற் பெறலாம்.

---

பள்ளத்தூர் ஸ்ரீகைலாசவிநாயகர்பதிகம்:—இது, பள்ளத்தூர்த் திருவாளர் அ. மு. ப. அ. முருகப்பசெட்டியாரவர்களால் இயற்றப் பெற்றது; செஞ்சொல்லும் இனியநடையும் உடையது. இயற்றியவரின் அன்புமுதலிய உயர்குணங்களை வெளியிடுவது. வேண்டுவோர் ஆக்கியோர்க்கெழுதிப் பெறலாம்.

---

தமிழணங்கு:—இது, ஒரு மதிமுகத்தாள்; நாளிது விக்கிரமஹூ சித்திரைமீ தொடங்கப்பெற்றது; தமிழைவளர்த்துத் தமிழ் மக்களை மேம்படுத்தும் சிறந்த நோக்குடையது; இதன் ஆசிரியர் ஆம்பூர்த் திரு. மா. சிவஞானம் என்பவராவர். இதன் முதல் இதழில் ஆசிரியராலும் பிற அறிஞர்களாலும் தமிழின்பழமையும் பெருமையும், தமிழ்ப்புலவர் தமிழ்வேந்தர் வரலாறுகளும் பிற்காலத் தமிழ்ப்புலவரியற்றிய தனிக்கவியும், வேண்டுகோளும், உறுதியுரைகளும் முதலிய பலவிடயங்கள் வந்துள்ளன. இதற்கு ஆயுள்வரி உள்நாட்டுக்கு ரூ 25. வெளிநாட்டுக்கு ரூ 35. ஆண்டு வரி உள்நாட்டுக்கு ரூ. 1—4—0 வெளிநாட்டுக்கு ரூ. 2—4—0 தனியிதழ் உள்நாட்டுக்கு அணா 2. வெளிநாட்டுக்கு அணா 3. வேண்டுவோர்: செயலாளர், தமிழணங்கு, தமிழரண், ஆம்பூர் (N. A. Dt.) என்ற விலாசத்திற் பெறலாம்.

---

தமிழ்க்கல்விக்கழக வெளியீடு:—இது, மோரிஷ்மாநகர்த் தமிழ்க் கல்விக்கழகத்தாரால் நாளிது விக்கிரமஹூ சித்திரைமீ முதற்றேதி வெளியிடப்பட்டது; மோரிஷ் முதலிய நகரங்களில் தமிழைவளர்க்கும் நோக்குடன் தொடங்கப்பெற்றது; தமிழ்மக்கள் ஒன்றுபட்டுத் தமிழ்ப்பணியில் ஈடுபடவேண்டிய அவசியத்தையும் தமிழர் தம் பெண்களுக்குத் தமிழ்க்கல்விபுகட்டவேண்டிய அவசியத்தையும் விரிக்கும் வியாசங்களும் விகடகதையும் இதில் அடங்கியுள்ளன. வேண்டுவோர்: 'காரியதரிசி', தமிழ்க்கல்விக்கழகம், No. 33. குயின்ஸ்ட்ரீட், போர்ட்லூய்ஸ், மோரிஷஸ்: என்ற விலாசத்திற் பெறலாம்.

---